இன்றைய அறிமுகம்!
நாளைய நாகரீகம்!
ஆதிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங் களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 21 வியாழக்கிழமை (05 — 01 — 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 40

# மோதல் தவிர்ப்பு அமுலுக்கு வரும் திகதியை
# சந்திரிகா நாளை நாடாளுமன்றில் அறிவிப்பார்!

## இருதரப்பு சமாதானப் பேச்சுக்களின் விவரங்களையும் வெளியிடுவார்

கொழும்பு, ஜனவரி 5

ஸ்ரீலங்கா அரசு — தமிழீழ விடுதலைப் புலிகள் இடையேயான இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்ட மோதல் தவிர்ப்பு உடன்பாடு—

எப்போது முதல் நடைமுறைக்கு வரும் என்பதை ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாளை நாடாளுமன்றத்தில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளை ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது அல்லது நாடாளுமன்றக் கூட்டத்தில் வைத்து நாளை செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கும் போது சம்பந்தப்பட்ட திகதியை அவர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

அரசு—புலிகள் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் குறித்து மேலெழுந்தவாரியான தகவல்களை நேற்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா வெளியிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை வெளிடுவதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பத்திரிகையாளர்களுடன் உரையாடிய அவர், சமாதானப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிற்கான பாதை திறப்பதில் இணக்க நிலை உருவாகவில்லை?

கொழும்பு, ஜன. 5

அரசு - புலிகள் இடையே நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது —

வடக்கிற்கு பாதுகாப்பான பாதை ஒன்றைத் திறக்கும் விடயத்தில் இணக்கம் காணப்படவில்லை என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் நேற்று தகவல் வெளியிட்டன.

செய்தி ஏஜென்ஸிகள் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மக்களின் போக்குவரத்துக்கு ஆனையிறவு பாதையையும், சங்குப்பிட்டி மார்க்கப் பாதையையும் திறந்து விடுவது பற்றிய யோசனைகளை அரச குழு இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது தெரிவித்துள்ளது.

வடபகுதியில் புனர்நிர்மாண வேலைகளுக்கு தேவையான கனரக வாகனங்களை கொண்டு செல்ல ஏதுவாக ஆனையிறவுப் பாதை திறக்கப்பட வேண்டும் என்று யோசனை கூறப்பட்டது.

அத்துடன் உணவுப் பொருள்களை விரைவாகவும், சிக்கனமாகவும் இந்தப் பாதையூடாக எடுத்துச்செல்ல முடியும் என்றும் அரச குழு தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பாப்பரசரைத் தரிசிப்பதற்கு கொழும்பு வரவிரும்புவோர் தமது பிரயாணத்துக்கு இப்பாதையை இலகுவாகப் பயன்படுத்த முடியும் என்றும் அரசு

( 6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சிநேகபூர்வ வரவேற்புக்கு அரசு, ஜனாதிபதி பெரும் பாராட்டு

கொழும்பு, ஜன. 5

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சென்ற அரசாங்கக் குழுவுக்கு விடுதலைப் புலிகள் அளித்துள்ள சிறந்த சிநேகபூர்வ வரவேற்புக்கும் —

காவலில் இருந்த நான்கு பொலீஸாரை விடுவித்து புலிகள் தமது நல்லெண்ணத்தைக் காட்டியிருப்பதற்கும் —

விடுதலைப் புலிகளை ஸ்ரீலங்கா அரசுத் தரப்பினரும் ஜனாதிபதியும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து நேற்று வெளியிடப்பட்ட அறிக்கை இவ்வாறு தெரிவித்துள்ளது.

செவ்வாயன்று நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது பல பிரச்சினைகளுக்குத் திருப்திகரமான தீர்வுகள் காணமுடிந்தது.

பேச்சுவார்த்தைகளின் போது —

கடந்த தேர்தல்களில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு மக்கள் அளித்த ஆணையை வரவேற்றுள்ள விடுதலைப் புலிகள் நாட்டில் இனவாத அரசியலை மக்கள் நிராகரித்திருப்பதை இது எடுத்துக்காட்டுகிறது என்று கூறியுள்ளார்கள்.

தமிழ் மக்கள் ஜனாதிபதி மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்றும் —

( 6ஆம் பக்கம் பார்க்க)

## உடன்பாட்டுக்குக் கொழும்பில் எச்சரிக்கையுடன் வரவேற்பு

கொழும்பு, ஜன. 5

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு கொழும்பில் எச்சரிக்கையுடன் வரவேற்கப்பட்டுள்ளது.

— இவ்வாறு "இந்தியன் எக்ஸ்பிரஸின்" கொழும்புச் செய்தியாளர் நீற்றா செபஸ்ரியன் வர்ணித்தார்.

இது ஒரு வெல்லமுடியாத யுத்தம். ஆகவே பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது இரண்டு தரப்புகளுக்கும் அவசியமாகின்றது.

தேர்தல்களில் மக்கள்—சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அனைவரும் — இதனையே தெரிவித்தனர்.

காமினி திஸாநாயக்க படுகொலை செய்யப்பட்ட

[ 6ஆம் பக்கம் பார்க்க]

### செய்தி ஏஜென்சிகள் முக்கியத்துவம்

கொழும்பு, ஜன 5

ஸ்ரீலங்கா அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாடு குறித்த செய்திகளுக்கு நேற்று சர்வதேச செய்தி ஏஜென்சிகள் முக்கியத்துவம் கொடுத்தன.

பி. பி. ஸி, ஆஸ்திரேலியா ஜேர்மன், சிங்கப்பூர், அமெரிக்கா உட்பட பல சர்வதேச வானொலிகள் செய்திகளுக்கு முக்கிய இடம் கொடுத்து ஒலிபரப்பின.




தமிழீழத்திலை இருந்து [illegible] கிளி போலை..!

### பங்குச் சந்தை சுறுசுறுப்பு

கொழும்பு, ஜன 5

அரசு- புலிகள் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருப்பதை அடுத்து—

நேற்று கொழும்பு பங்குச் சந்தையில் பங்குப் பரிமாற்ற வீதம் 6.74 வீதம் அதிகரித்ததாக அறிவிக்கப்படுகிறது. (உ)

### கரவைக் கந்தசாமி கொலை:

## யாழ். பல்கலை மாணவியும் அவரது சகோதரரும் கைது

கொழும்பு ஜன. 5

கரவைக் கந்தசாமியின் கொலை சம்பந்தமான விசாரணை செய்யப்படுவதற்கு யாழ்.பல்கலைக்கழகப்பட்டதாரி மாணவியும் அவரின்சகோதரரும்இன்னும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முகத்துவாரம் அளுத் மாவத்தையில் உள்ள வீடு ஒன்றிலிருக்கும் பொழுது இவர்கள் தெகிவளைப் பொலீஸாரால்கைது செய்யப்பட்டனர்.

(ஒ-க-6)

(முன் வந்த செய்திகள் 3ஆம் பக்கத்தில்)

### காரைநகர் படைத்தளம் போன்று

## காங்கேசன்துறையிலும் கடற்படைத் தளம்!

யாழ்ப்பாணம், ஜன. 5

ஸ்ரீலங்கா கடற்படைத் தளம் ஒன்று காங்கேசன் துறையில் "எஸ். எல். என். எஸ். உத்தர" என்ற பெயரில் புதிய நடவடிக்கை பிரிவு ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டில் இருந்து காங்கேசன்துறையில் இந்தக் கடற்படைத் தளம் தனியாக இயங்கத் தொடங்கியுள்ளது. இதற்கான ஆரம்ப வைபவம் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது.

இந்தக் கடற்படைத் தளம் காரைநகரில் உள்ள கடற்படைத் தளம் போல பாரிய அளவில் விஸ்தரிக்கப்படும் என்றும் செய்திகள் கூறுகின்றன.

காங்கேசன் துறையில் இருந்த கடற்படை முகாம் இதுவரை காலமும் காரைநகர் கடற்படைத் தளத்தின் ஒரு சிறுபிரிவாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-3)

### தமிழாராய்ச்சி மாநாட்டிலிருந்து

## அறிஞர்கள் வெளியேற்றம்: தமிழ் உலகு கண்டனம்

மணிலா, ஜன. 5

தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்கேற்க வந்த தமிழ் அறிஞர்களை வெளியேற்றியிருப்பது வெட்கக்கேடான ஒன்று என உலக தமிழ் அறிஞர்கள் பலர் கண்டனம் வெளியிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கா. சிவத்தம்பி, சுவீடன் நாட்டின் உப்சலா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் ஷோக் மற்றும் பேராசிரியர் வேலுப்பிள்ளை ஆகியோர் உட்பட சில அறிஞர்கள் கடந்த திங்கட்கிழமை மாநாடு நடக்கும் இடத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டிருந்தனர்.

65 வயது தமிழ் மூதறிஞர் சிவத்தம்பியை தனி அறையில் அடைத்து வைத்தார்கள் என்றும் —

பின்னர் இவரைச் சந்திக்க வந்தவர்களை பொலீஸார்

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஈழ அறிஞர்கள் பங்குபற்ற தடையாக இருந்தது சி.பி.ஐ.

யாழ்ப்பாணம், ஜன. 5

தஞ்சாவூரில் கடந்த முதலாம் திகதி ஆரம்பமான மாநாட்டில் இலங்கைத் தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்ள மத்திய புலனாய்வுத் துறை [சி.பி.ஐ.] தடையாக இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து விண்ணப்பித்தவர்கள் பற்றிய விவரம் மத்திய புலனாய்வுத் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் —

மத்திய புலனாய்வுத்துறை அனுமதி வழங்கியவர்களுக்கு மட்டுமே கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் விஸா வழங்கியதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் பங்குபற்றும் நோக்குடன் தமிழகம் செல்வதற்காக கொழும்புக்குச் சென்றிருந்த — யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த—கல்விமான்கள் பலர் தமிழகம் செல்ல விஸா கிடைக்காததால் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினர்.

இதே வேளை —

கொழும்பில் சிறிய அளவிலான தமிழாராய்ச்சி மாநாடு ஒன்றை நடத்த தமிழாராய்ச்சி மாநாட்டின் இலங்கைக் கிளை ஏற்பாடுகள் செய்து வருவதாகவும் —

அறிஞர்களிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## அழைப்பின்றிச் சென்றதால் வெளியேற்றப்பட்டனராம்!

யாழ்ப்பாணம், ஜன 5

தஞ்சாவூரில் நடைபெறும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் அவரது துணைவியார் ஆகியோர் மாநாட்டு அழைப்பிதழ் இன்றி சென்றதாலேயே இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக தற்சமயம் தெரியவந்துள்ளது.

மாநாடு ஆரம்பவிழாவில் அழைப்பிதழ் இன்றி கலந்து கொண்டவர்களை பொலீசார் கைது செய்ததாகவும்—

அவர்களில் இவர்களும் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாநாட்டு அமைப்புக் குழுவின் முக்கிய பிரமுகரான ஜப்பான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஹிரோஷி

( 6 ஆம் பக்கம் பார்க்க)

### யுத்த நிறுத்தத்தை

## கண்காணிக்கும் குழுவில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள்

அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமுலுக்கு வரவிருக்கும் உத்தேச மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை கண்காணிக்கவும் உடன்படிக்கை மீறல்களை கவனிக்கவும் குழுக்கள் நிறுவப்பட இருப்பதாக அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

இந்தக் குழுக்களில் அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் பிரதிநிதிகளுடன், வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இடம்பெறுவர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-3)

## எமக்குக் கிடைத்த விடுதலை சமாதான அடையாளம்

### விடுவிக்கப்பட்ட பொலீஸார் பேட்டி

கொழும்பு, ஜன. 5

எமது விடுதலை சமாதானத்துக்கான அடையாளமாகும். யாழ்ப்பாண மக்கள் சமாதானத்தையே எதிர்பார்க்கின்றனர். போரை விரும்பவில்லை.

இவ்வாறு நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட பொலீஸார் கொழும்பில்செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள்

நாரஹேன்பிட்டியில் உள்ள பொலீஸ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள அவர்கள் தமது கருத்துக்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தனர்.

விமல் சந்திரசிறி என்ற பொலீஸ்காரர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின் பரஸ்பரம் நம்பிக்கை வைத்து நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்கும் என நான் நம்புகின்றேன் மக்களும் அதனையே எதிர்பார்க்கிறார்கள்.

எஸ். பி. அத்துக்கோரளை என்பவர் கருத்துத் தெரிவிக்கையில் —

தடுத்து வைக்கப்பட்டுள்ள 15 பொலீஸாரையும் ஏனைய இராணுவ வீரர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கவுள்ளோம். —

தடுப்புக் காவலில் இருப்பவர்கள் தமக்குப் புதிய அரசாங்கத்தில் நம்பிக்கை இருப்பதாகவும் தங்களை விடுவிக்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் மீண்டும் மாற்றம்

கொழும்பு, ஜன. 5

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை நாளை வெள்ளிக்கிழமை காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆரம்பித்து வைத்து, அரசின் கொள்கை அறிக்கையை வெளியிட்ட பின்னர், அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெறக் கூடும் என்று அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'தஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

இந்தஅமைச்சரவை மாற்றத்தின் போது —

தற்போது அமைச்சுப் பொறுப்புகள் பலவற்றை வகித்து வரும் அமைச்சர்களிடம் இருந்து சில பொறுப்புகள் விலக்கப்பட்டு புதிதாக சிலரிடம் வழங்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சுப் பொறுப்புக்களை வகித்துவரும் அமைச்சர்கள் சிலர் அதிக வேலைப்பளு காரணமாக தாம் நோய்வாய்ப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

முக்கிய அலுவல்களுக்காக தமது அமைச்சர்களைச் சந்திக்க முடியாதுள்ளதாக அமைச்சின் செயலாளர்கள் சிலர் கூறியுள்ளனர்.

கடும் வேலைப்பளு காரணமாக பதவியேற்ற பின்னர் அமைச்சர்கள் சிலர் இதுவரை இரண்டோ மூன்று தடவைகள் மட்டுமே தங்கள் அமைச்சுக்களுக்குச் சென்றுள்ளனர் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ-ஐ)

### திருட்டுக் குற்றச்சாட்டின் பேரில்

## யாழ். வாசிகள் இருவர் கொழும்பில் கைது!

கொழும்பு, ஜன. 5

காரைநகர் கூட்டுறவுச் சங்கத்துக்கு எடுத்து வரப்பட்ட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சன்லைட் சவர்க்காரப் பெட்டிகளை திருடியதன் பேரில் யாழ்ப்பாண வாசிகள் இருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மல்லாகத்தைச் சேர்ந்த வல்லிபுரம் சிவா, தெற்கு கொக்குவில்லை சேர்ந்த செல்லர் அமிர்த நாயகம் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் இப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது

காரைநகர் கூட்டுறவுச் சங்கத்துக்கு பொருள்களை கொள்வனவு செய்ய கணபதிப்பிள்ளை தியாகராஜா என்ற கூட்டுறவு சங்க ஊழியர் கொழும்புக்குச் சென்றிருந்தார். அங்கே பழைய யோன் வீதியில் உள்ள ஒருவரிடம் சவர்க்காரப் பெட்டிகளை எடுத்துச் செல்ல லொறி ஒன்றை வாடகைக்கு பெற்றுத் தரும்படி கூறிப் பொருள்களையும் அவரிடம் ஒப்படைத்தார்.

மறுநாள் காலை வந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி உயர்வு வழங்கும் விடயத்தில் ராணுவத்துக்குள் பெரும் அதிருப்தி!

## திறமையைக் கவனிக்காமல் சேவை மூப்பு கணிக்கப்படுகின்றதாம்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் பிரிகேடியர்கள் பலர் அண்மையில் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டமை குறித்து பாதுகாப்பு வட்டாரங்களில் ஆச்சரியம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சண்டே லீடர்' ஆங்கில வார இதழில் சண்டே ஜ குறுப்பு எழுதிய கட்டுரையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிகேடியர்கள் ரி. சிவசண்முகம், ஜி. பி. குலத்துங்க, எச். எஸ். ஹப்புவராய்ச்சி, சி. எஸ். வீரசூரியா, ஜே. நம்முனி, ஏ. கே. ஜெயவர்த்தனா, ஈ. எச். சமரதுங்க, டபிள்யூ. எம். பி. பெர்னாண்டோ, எஸ். ரி. ரி. ஜெயசுந்தரா ஆகியோரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தி இருந்தார்.

இந்த பதவி உயர்வுகள் முற்று முழுதாக சேவை மூப்பை அடிப்படையாக வைத்தே வழங்கப்பட்டிருந்தன.

இந்தப்பதவிஉயர்வு வழங்குதலின் போது களத்தில் நின்று போராடும் அதிகாரிகளின் திறமை கவனத்தில் எடுக்கப்படவில்லை.

இராணுவ சேவையை ''எழுதுநர் சேவை'' தரத்தில் வைத்து கணித்து எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையால் இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா கண்டனத்துக்கு உள்ளாகி இருக்கிறார்.

களத்தில் தோல்விகளைச் சந்தித்ததாக நிரூபிக்கப்பட்டவர்கள் கூட சேவை மூப்புக் காரணமாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

ஆனால் எதிர்மறையாக —

ஜெனரல் ஜெரி சில்வா 1993 மே 31 இல் அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சிசில் வைத்தியரத்னாவுக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் —

இராணுவ அதிகாரிகளுக்கு அவர்களின் திறமை, பெறுபேறு ஆகியவற்றைக் கணிக்காமல் சேவை மூப்பின் அடிப்படையில் மட்டும் பதவி உயர்வு வழங்குவதை ஆட்சேபித்திருந்தார்.

தகைமையுடைய அதிகாரிகளை — சேவை மூப்பை பார்க்காமல்— அவர்களின் திறமையடிப்படையில் - பதவி உயர்த்துவது, களத்தில் உள்ள சிரேஷ்ட கட்டளையிடும் அதிகாரிகளுக்கும், ஜெனரல்களாக வர மனவிருப்புக்கு கொண்டவர்களுக்கும் குறிப்பிடத்தக்க பெறுபேறுகளை களத்தில் நிலைநாட்டத் தூண்டுவதாகவும்ஊக்கப்படுத்துவதாகவும் இருக்கும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான வடக்கு-கிழக்கு யுத்தத்தில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் இராணுவ வெற்றியை எட்டுவதற்கு இத்தகைய தூண்டுதலும் ஊக்கப்படுத்தலும் அவசியமானவையாகும்.

பதவி உயர்வு தொடர்பாக நியாயத்தை நிலைநாட்டுவதன் மூலம், படையினரின் மனோதிடத்தை உற்சாகப்படுத்தி அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கையையே— இன்று அதிகமாக தேவைப்படுகின்ற—சிறந்ததலைமை— மேற்கொள்ளும் என்பதில் சந்தேகம் இல்லை.

அண்மைக் காலத்தில் வழங்கப்பட்ட பதவி உயர்வுகளின் போது பதவி உயர்வுகளை சிபாரிசு செய்வதற்கு ''பதவி உயர்வுச் சபை'' ஏதும் நியமிக்கப்படாததன் மூலம் தவறான முன்மாதிரி ஒன்று செய்து காட்டப்பட்டிருக்கிறது.

இத்தகைய போக்கு—

அர்ப்பணிப்புள்ள பல இராணுவ அதிகாரிகளின் திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தைக் குலைத்துள்ளது.

''எனது நேரம் வரும் வரை நான் காத்திருந்தால் எப்படியாயினும் நான் பதவி உயர்த்தப்பட்டு விடுவேன். அப்படியிருக்கையில் நான் ஏன் எனது கழுத்தை ஆபத்தில் சிக்க வைக்க வேண்டும்?'' — என்று கேட்டார் ஒரு கேணல்.

''ஸ்ரீலங்கா இராணுவத்துடனான கெரில்லா யுத்தத்தில் என்ன பாடத்தைக் கற்றுக் கொண்டீர்கள்?'' என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடம் ''ரைம்'' சஞ்சிகை செய்தியாளர் கேட்டதற்கு—

''துணிவுள்ளவன் வெற்றி பெறுவான்'' — என்று அவர் பதிலளித்தார்.

பிரிட்டனின் சிறந்த விமானப் படையணியான—விசேட விமானசேவையின் [எஸ். ஏ. எஸ்ஸின்] — மகுட வாசகமாகவும் இதுவே உள்ளது. இந்தப்படையணி அதிகாரிகள் 1980 களில் ஸ்ரீலங்கா படைகளுக்கு பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளிலும் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இத்தகைய செலவுமிக்க பயிற்சிகளினால் நாம் பெற்றது என்ன?

போரிடும் படை என்பதிலும் பார்க்க சிவில் சேவை என்பதை ஒத்த முறையில் பதவி உயர்வு வழங்கப்படும் ஒரு இராணுவத்தினால் நன்றாகச் செயற்படுவது என்பது அடைய முடியாத இலக்காவே இருக்கும்.

இந்த அதிகாரிகளில் பலர் களத்தைக் கண்டவர்கள் அல்லர். அவர்கள் உயர்ந்த உயர்பதவியில் இருக்கும்வரை களத்தில் அதிக அனுபவமுடைய இளைய அதிகாரிகளை வழிநடத்துவது என்பது இயலாததாகவே இருக்கும்.

அதிகாரிகளுக்கு அவர்களது சாதனைகள் பெறுபேறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன என்பதற்கு ஸ்ரீலங்கா இராணுவத்தில் பல முன்மாதிரிகள் உள்ளன.

தற்போதைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் லெப்டினன்ட் கேணல் அனுருத்த ரத்வத்தை இதற்கு நல்ல ஓர் உதாரணம்

1970 இல், ஸ்ரீமதி சிறிமாவே பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில், ஒரு வர்த்தமானி அறிவித்தல் மூலம் இரவோடு இரவாக லெப்டினன்ட் தரத்தில் இருந்து – கப்டன், மேஜர் ஆகிய தரங்களைத் தாண்டி— லெப்டினன்ட் கேணல் தரத்துக்கு அவர் பதவி உயர்த்தப்பட்டார்.

இன்னொரு தகைமையுடைய அதிகாரியான ஹெக்டர் டிவிடொட்டவெல கப்டன் தரத்திலிருந்து கேணல் தரத்துக்கு உயர்த்தப்பட்டார்.

அண்மைக் காலத்தில் கூட— 1993இல் திருகோணமலையில் கட்டளையிடும் அதிகாரியாக திறமைமிகு பணியாற்றியதற்காக கேணல் ஏ. எஸ். பீரிஸ் பிரிகேடியர் தரத்துக்கு உயர்த்தப்பட்டார்.

அத்தகைய அதிகாரியான பீரிஸ் தற்போது செயல்பாடு குறைந்த ஆட்லறி பிரிவுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

ஆனால் அதேசமயம்—

கடந்த வருடம் ஜெனரல் ஜெரி டி சில்வாவின் தலைமையின் கீழ் பூநகரி விசாரணைக் குழுவினால் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது தவறு செய்தவர் எனக் காணப்பட்டு, பதவி உயர்வு இடைநிறுத்தப்பட்டிருந்த பிரிகேடியர் கெமுனு குலதுங்க மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

1989 முதல் 1992 வரை பாகிஸ்தானில் உள்ள ஸ்ரீலங்கா தூதரகத்தில் கடமையாற்றிய பிரிகேடியர் குலதுங்க, அண்மைக் காலம் வரை பாதுகாப்பு அமைச்சில் சிரேஷ்ட நிர்வாக அதிகாரியாக இருந்தவர். அதனால் களத்தில் அவருக்கு உள்ள அனுபவம் மட்டுப்படுத்தப்பட்டதாகும்.

திறமை, பெறுபேறு ஆகியவற்றைப் பார்க்காமல் சேவை மூப்பை மட்டும் கட்டாயமாகக் கவனித்து பதவி உயர்வு வழங்கி வந்த ஐ. தே. க. அரசின் உணர்வற்ற செயற்பாட்டு முறையை திறமையுற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலர் வெளிப்படையாக கண்டித்து வந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா இராணுவம் பல பின்னடைவுகளைச் சந்தித்தமைக்கு இதுவும் ஒரு பகுதிக் காரணமாகும்.

இதே மாதிரியான பொறிக்குள் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வீழ்ந்திருப்பது மேலும் மனவேதனையை அதிகரித்திருக்கிறது.

ஸ்ரீலங்காவில் தமது கடமையை சரிவர ஆற்றாத ஒரு ஜெனரல் உட்பட பல சிரேஷ்ட அதிகாரிகள் இந்திய அமைதிப் படையில் இருந்து நீக்கப்பட்டதை இங்கு குறிப்பிடலாம்.

இத்தகைய களையகற்றும் செயல்முறை போரிடும் ஓர் இராணுவத்துக்கு அவசியமானது என பாதுகாப்புத் துறை அவதானிகள் கூறுகின்றனர்.

புத்தி நுட்பமும், இராணுவத் தந்திரோபாயமும் மிகக பிரபாகரன், யுத்த நிறுத்த வேளையில் இருதரப்பாரும் தங்களைப் பலப்படுத்திக் கொள்வர் என்று கூறியிருக்கிறார்.

தனது செயல்களை இணைந்து ஆற்றுவதற்கு அரசுக்குக் கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பம் இதுவாகும்

— இப்படி அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)




(ஓ-261)


## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் சின்னவன் சின்னையா

மண்ணில் மலர்வு: 05-02-1912 மண்ணில் உதிர்வு 26-11-1994

அன்புருவால் எம்மை உருவாக்கி அறிஞர்க்குள் எமை இருத்தி. இவன் தந்தை என்னதவம் செய்தானோ எனவைத்த தந்தையே! உங்கள் சாந்த முகம் காணாமல் அறிவுரைகள் கேட்காமல் தந்தை என்ற உற்ற துணையின்றி தவிக்கின்றோம். இருந்தும் விண்ணுலகில் இறையோடு நீயிருந்து இன்னுரைகள் பரிமாறி இன்புற்றிருக்க இறைசாந்தி வேண்டி இறை தாழ் பணிகின்றோம்.

எமது தந்தையாரின் மரணச் செய்திகேட்டு நேரடியாக வந்து, அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும் சகல வழியிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இன்று(05-01-95) வியாழக்கிழமை நடைபெறும் தந்தையின் அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்.

சிமிழ் அம்மன் கோவிலடி,
வரணி வடக்கு,
வரணி

(11323)

## புத்தாண்டு தினத்தில் வடமராட்சி மக்களை அரச அதிபர் சந்தித்தார்

வடமராட்சி, ஜன. 5

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலகப் பிரிவில் வன்செயல்களினால் ஏற்பட்ட சேதங்கள், அழிவுகள் என்பவற்றை யாழ். அரசாங்க அதிபர் திரு க. பொன்னம்பலம் கடந்த ஞாயிறன்று நேரில்பார்வையிட்டார்

யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் உதவித் திட்டப் பணிப்பாளர். திரு எஸ். மகாலிங்கம் ஆகியோர், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு. ஆ சிவசுவாமி சகிதம் அரச அதிபர் இவற்றைப் பார்வையிட்டார்.

புத்தாண்டு தினமான ஞாயிறன்று மேற்கொண்ட இவ் விஜயத்தின்போது,

பருத்தித்துறை முனை/தொடக்கம் தொண்டமானாறு வரையிலுள்ள கரையோர கிராம மக்களையும் நேரடியாகச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் அரச அதிபர் தலைமையிலான தூதுக்குழு கேட்டறிந்தது.

அத்துடன் இப்பகுதியிலுள்ள பல அகதிமுகாம்களுக்குச் சென்று அங்கு தங்கியுள்ளோரின் பிரச்சினைகளையும் தேவைகளையும் குழுவினர் கண்டறிந்தனர்.

இதுதவிர பருத்தித்துறை பிரதேச செயலகம் இன்பருட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், வல்வெட்டித்துறை நகரசபை அலுவலகம் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் ஆகிய நான்கு இடங்களிலும் அரச அதிபர் உத்தியோக பூர்வ சந்திப்புக்களையும் நடத்தினார்.

உத்தியோக பூர்வ சந்திப்புக்களின்போது நகர. பிரதேச சபைகளின் செயலாளர்கள், வைத்தியசாலைகளின் பிரதிநிதிகள், கல்வி அதிகாரிகள், சனசமூக நிலையங்கள், கடற்றொழில் சங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்கள், வாணிபர் கழகங்கள் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சேதங்கள், தேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பன பற்றி விவரமாக அரச அதிபரிடம் எடுத்துக் கூறினர் பல மகஜர்களும் கையளிக்கப்பட்டன. [அ-173]

## சின்ன வெங்காயத்துக்கு பசுந்தாள் பசளை சிறந்தது

### விவசாய அதிகாரி ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜன 5

சின்ன வெங்காய உற்பத்திக்கு இயற்கை பசுந்தாள் பசளையே சிறந்தது ஆகும்.

— இவ்வாறு யாழ். மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் திரு. [illegible] நாதன் உற்பத்தியாளர்களுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளார்.

பூவரசம் இலை, வேப்பம் இலை, சணல் போன்றவற்றை நிலத்தில் புதைப்பதன் மூலம் இப்பசளை பெறப்படுகிறது.

இப்பசளையை பாவிப்பதன் மூலம் சின்ன வெங்காய [illegible] மும் என்றும் புகையிலை [illegible] உபயோகிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்ற அமர்வு வைபவத்தை ஐக்கிய தேசியக்கட்சி பகிஷ்கரிக்கும்

### இன்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்படும்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாளை காலை 9-30 மணிக்கு நாடாளுமன்ற அமர்வை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொள்வதா? அல்லது இல்லையா? என்பது குறித்து ஆராய ஐ. தே. க நாடாளுமன்றக் குழு இன்று கூடவிருக்கிறது

நாடாளுமன்றக் கூட்டத்தில் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இந்த விடயம் ஆராய்ந்து முடிவு செய்யப்படவிருக்கிறது

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட ஜி. எம். பிரேமச்சந்திரா, காமினி விஜயசேகரா ஆகியோரின் இடத்துக்கு புதியவர்களை நியமிப்பது குறித்தும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்படவிருக்கிறது.

## புதுவருட நாளில் படையினர் தேடுதல் கணவன், மனைவி, மகன் கொலை!

### மட்டக்களப்பில் சோகச் சம்பவம்

மட்டக்களப்பு, ஜன.5

புதுவருட தினமான கடந்த ஞாயிறன்று மட்டக்களப்பு மாவட்டம் கிகிலி வட்டை கிராமத்தில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் குடும்பத்தலைவனான வேலாயுதம் [வயது 45] என்பவர் புலிகளின் ஆதரவாளர் என்ற சந்தேகத்தின் பேரில் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவருடன் அவரது மனைவியான தங்கமணி [வயது 38] மற்றும் அவர்களது மகன் ஆகியோரும் கொல்லப்பட்டனர்.

ஞாயிறு காலை சந்தி வெளி ஆற்றைக் கடந்து கிகிலி வட்டைக்குச் சென்ற படையினர் அப்பகுதியில் பதுங்கி இருந்தனர் என்றும்—

குடும்பத் தலைவன் வீட்டுக்கு வந்ததும் காத்திருந்த படையினர் வீட்டுக்குள் வைத்து அவரையும் மனைவி மற்றும் மகனையும் சுட்டுக் கொன்றனர். என்றும் தெரிவிக்கப்படுகிறது

காலை 9 மணியளவில் புத்தாண்டுக்கு பொங்கல் செய்து அதனை உண்பதற்கு தயாரான வேளையிலேயே இவர்கள் மூவரும் கொல்லப்பட்டுள்ளனர். மூவரின் சடலங்களையும் படையினர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். (ஐ)

## போதிய வசதிகள் அற்ற நிலையில் 65 ஆயிரம் பேருக்கு கடந்த ஆண்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை!

### காய்ச்சலினால் பீடிக்கப்பட்டோரே அதிகம்

யாழ்ப்பாணம், ஜன. 5

கடந்த ஆண்டு யாழ். ஆஸ்பத்திரியில் 65 ஆயிரத்து 109 பேர் வார்ட்டுக்களில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 6ஆயிரத்து 173 பேர் கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இது கடந்த பல ஆண்டுகளையும் விட அதிகமானது என ஆஸ்பத்திரி பதிவேடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை— வெளிநோயாளர் பிரிவில் கடந்த ஆண்டு சிகிச்சை பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 3லட்சத்து 33 ஆயிரத்து 863 ஆகும்.

கடந்த ஆண்டில் சிகிச்சை பெற்றவர்களில் 65 வீதமானவர்கள் பலவித காய்ச்சல்களினால் பீடிக்கப்பட்டவர்களே என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

டாக்டர்கள் பற்றாக்குறை போதிய வசதிகள் இல்லாமை போன்ற நிலைமையில் யாழ். ஆஸ்பத்திரி இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-15)

## பிறப்பு, இறப்பு வீதமும் கடந்த ஆண்டு அதிகரிப்பு

யாழ். ஆஸ்பத்திரி பதிவேடுகளின் படி பிறப்புஇறப்பு வீதமும் கடந்த 94 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 600ஆகும்

கடந்த 1993 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை ஆயிரத்து நூறாக உள்ளது,

இதேபோன்று யாழ். ஆஸ்பத்திரி பதிவுகளின் படி கடந்த ஆண்டு 6ஆயிரத்து 500 குழந்தைகள் பிறந்துள்ளன. இந்த எண்ணிக்கை 1993ஆம் ஆண்டிலும் பார்க்க 400 அதிகமாகும். (ஐ-15)

## இன, மொழி, சமூகப் பற்றால் முன்னுக்கு வந்தவர் எம்.ஜி.ஆர்.

### நினைவு நாள் விழாவில் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன. 5

இனப்பற்று, மொழிப்பற்று சமூகப்பற்று இம்மூன்றினாலும் முன்னுக்கு வந்தவர் தான் மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி ஆர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிரதேச செயலர் திரு க. குணராசா.

புரட்சித் தலைவர் எம். ஜி. ஆரின் 7ஆம் ஆண்டு நினைவு நாள் விழாவில் கலந்து கொண்டு நினைவுப் பேருரையாற்றும்போதே அவர் முன் கண்டவாறு தெரிவித்தார்.

சென்ற மாதம் 26 ஆம் திகதி மாலை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திறந்த வெளி அரங்கில் அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவைத் தலைவர் திரு பொன். மதிமுகராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து நினைவுரையாற்றுகையில் தமிழ்மொழியை விஞ்ஞான அறிவியலுக்கு ஏற்ற வகையில் வளர்த்தெடுக்க பாடுபட்டவர் மறைந்த முதல்வர் — என்றார்.

அமரர் எம். ஜி ஆரின் உருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்துதல், மலர் மாலை அணிவித்தல், தமிழ்த்தாய் வாழ்த்து. மங்கள இசை என்பனவும் இடம்பெற்றன.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. சி. வேலாயுதம், திரு. சிவமகாலிங்கம் ஆகியோர் விழாவில் சிறப்புரையாற்றினர். தொடர்ந்து கவியரங்கு, பட்டிமன்றம் ஆகிய கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (க-4)

## மத்தியஸ்தர் சங்கக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன 5

நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவிருந்த யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் என சங்கத் தலைவர் திரு டி. ஆர். அருமைநாயகம் தெரிவித்துள்ளார். (ஐ-20)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் R.D தனபாலசிங்கம்
(போடிங் மாஸ்டர்)

கல்லூரி விடுதி கண்ட
கனிவான அதிபனாகி
எல்லோரும் போற்ற வாழ்ந்த
எங்களின் தலைவரேறே!

மற்றவர்க் குதவி செய்யும்
மனதினால், யாவருக்கும்
உற்றவன் ஆகி வாழ்ந்த
உயர்தனிப் பண்பினாலே

கற்றவர், பாமரர்க்கும்
காகளோர் ஏழையர்க்கும்
கொற்றவன் போல மண்ணில்
கொலுவிருந் தாண்டுபோனீர்!

இவ்வண்ணம்:
மனைவி, பிள்ளைகள் மற்றும்
உற்றார், உறவினர்கள்.

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.
4-1-95

(34525)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மின்சாரத்தைத் துண்டித்து விட்டு மின்வேகத்தில் இயங்கிய கொலையாளி

## கரவைக் கந்தசாமி கொலை குறித்து மேலும் தகவல்

கொழும்பு, ஜன. 5
புளொட் அமைப்பின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உப தலைவரான கரவைக் கந்தசாமியின் கொலை குறித்து மேலும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

கடந்த 31ஆம் திகதி இரவு 8-30 மணி அளவில் தெஹிவளை றொபர்ட் வீதியில் உள்ள தமது வீட்டு தொலைக் காட்சியில் ''இராமாயணம்'' தொடர் காட்சி பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது கந்தசாமியின் வீட்டு மின்சாரம் திடீரென துண்டிக்கப்பட்டது.

ரோர்ச்லைட்டை எடுத்து வருமாறு தமது மகள் ஜெயபாரதியிடம் (வயது 23) சொல்லிவிட்டு கந்தசாமி வெளியே வந்தபோது 9 எம் ரக தன்னியக்கத் துப்பாக்கி மூலம் அவர்மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

ரோர்ச்லைட் எடுக்கச் சென்ற சமயம் வேட்டுச் சத்தம் கேட்டு ஓடிவந்த மகள் மீது கிரனைட் தாக்குதல் நடத்தப்பட்டது.

கந்தசாமிக்கு கழுத்தின் பின்புறத்தில் துப்பாக்கிச்சூட்டுக் காயம் பட்டது.

அவரின் மகள் கிரனைட் தாக்குதலினால் கடும் காயத்துக்கு உள்ளானார்.

கொழும்பு பெரியாஸ்பத்திரி தீவிர கண்காணிப்புப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டார். ஆஸ்பத்திரியில் அவருக்கு பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

கந்தசாமி களுபோவில ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

புத்தாண்டு தினம் பிறக்க இருந்த சமயம், பட்டாஸுகள் கொளுத்தப்பட்டுக் கொண்டிருந்தபடியால் இந்த துப்பாக்கி வேட்டுச் சத்தத்தையும், கிரனைட் சத்தத்தையும் எவரும் இனம் கண்டு கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

# தேடப்படும் யாழ். மாணவி பெயர் "ரெஜினா" என்கின்றனர் பொலீஸார்

கொழும்பு, ஜன. 5
கொழும்பு தெஹிவளையில் கடந்த சனிக்கிழமை இரவு சுட்டுக்கொல்லப்பட்ட ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உபதலைவர் கரவைக் கந்தசாமி கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தேடப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவியின் பெயர் 'ரெஜினா' என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

பிரஸ்தாப பெண் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து கந்தசாமியின் வீட்டில் தங்கியிருந்த பின்னர் தலைமறைவாகி இருந்தார் என்றும்—

பொலீஸில் பதிவு செய்யாமல் நடைமுறைக்கு மாறாகவே அவர் கந்தசாமி வீட்டில் தங்கியிருந்தார் என்றும்— கூறப்படுகிறது.

இப் பெண் தெஹிவளையில் இருந்து தலைமறைவாகி கல்கிஸையில் வீடு ஒன்றில் தங்கி உள்ளார் என்ற தகவலை அடுத்து பொலீஸார் அங்கு சென்ற போதிலும் அப்பெண்ணைப் பிடிக்க முடியவில்லையாம்.

அப்பெண் முகத்துவாரப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருப்பதாக கிடைத்த மற்றொரு தகவலைத் தொடர்ந்து பொலீஸார் அப்பகுதியில் தேடுதலை மேற்கொண்டனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. (இ)

# கடந்த ஆண்டு நடந்த கடைசிஅரசியல்கொலை

கரவைக்கந்தசாமி கொலை கடந்த ஆண்டுநடந்த கடைசி அரசியல் கொலை என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

எவினும் இக்கொலை தொடர்பாக உடனடியாக எந்த ஒரு முடிவுக்கும் வரமுடியாதிருப்பதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக்கொலைக்கு மாற்று இயக்கமா? அல்லது உள்விவகாரமா காரணம் என்பதை கண்டறிய தீவிரமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கொலை தொடர்பாக இதுவரை 12 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (இ)

# வெள்ளவத்தையில் "ஓட்டோ" கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜன. 5
கரவைக் கந்தசாமியைச் சுட்டுக் கொன்றவர் தப்பிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட ''ஓட்டோ'' வெள்ளவத்தை ஹொலின்வூட் பிளேஸுக்கு அருகில் அநாதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஓட்டோவின் சாரதி வெள்ளவத்தை பொலீஸில் அளித்த வாக்கு மூலத்தில் கொலையாளி தமது ஓட்டோவை மறித்து துப்பாக்கியைக் காட்டி ஓட்டோவைச் செலுத்துமாறு தம்மை அச்சுறுத்தினார் என்றும் —

தாம் செலுத்திச் செல்லவே தெஹிவளை கலன் அவின்யூவுக்கு அருகாமையில் வைத்து தம்மை விரட்டிவிட்டு ஓட்டோவை அவரே செலுத்திச் சென்றார் என்றும் தெரிவித்தார்.

கொலைச் சம்பவ இடத்தில் இருந்து பொலீஸார் 9.9 மி. மி. கிரனைட் கிளிப்பையும் கிரனைட் மூடியையும் கண்டெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# கந்தசாமி கொலைக்கு அரசு கவலை தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 5
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் துணைத் தலைவர் கரவை கந்தசாமி படுகொலை செய்யப்பட்டதை ஒட்டி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதன் ஆழ்ந்த அதிர்ச்சியையும் கவலையையும் தெரிவித்துள்ளது.

கரவை கந்தசாமியின் குடும்பத்தினருக்கு அரசாங்கம் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துள்ளது.

அதேவேளையில் எந்தவிதமான அரசியல் வன்முறைச் சம்பவங்களைக் கண்டிப்பதிலும் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்ப்பதிலும் சகல உண்மையான ஜனநாயக சக்திகளும் ஒன்றுபட வேண்டும் என்றும் அரசாங்கம் கேட்டுக்கொண்டது. (ஒ-க)

# விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர் சுவீடனுக்குள் தலைமறைவாகினர்

சுவீடனில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்த வெளிநாட்டவர்கள் பலர் நாட்டுக்குள் தலைமறைவாகி விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தலைமறைவானவர்களில் பலர், அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்து அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது.

தலைமறைவானவர்களில், அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பித்து, விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளவர்களும் அடங்கி உள்ளனர்.

சுவீடனில் முறையான வதிவிட அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களை அவர்களுக்கான அகதி விண்ணப்பம் அல்லது நாடு கடத்தும் நடவடிக்கை தொடர்பான தீர்வு கிடைக்கும் வரை தடுப்புக் காவலில் வைப்பதற்கு புதிய சட்டம் அதிகாரமளித்துள்ளது.

இதன்படி இவர்களின் இருப்பிடங்களை சோதனையிடவும் பொலீஸாருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

# ஆயுத தொழிற்சாலை கண்டு பிடிப்பு

கொழும்பு, ஜன. 5
சட்டவிரோதமாக உள்ளூர் ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை எம்பிலிப்பிட்டிய பொலீஸார் கண்டு பிடித்துள்ளனர்.

மித்தெனியாவில் நடந்த ஒரு கொலை தொடர்பாக ஒரு வீட்டில் இருந்து பொலீஸாரால் கைப்பற்றப்பட்ட விசேட ரக துப்பாக்கிகுறித்து விசாரணை செய்த பொலீஸாரே ஆயுத உற்பத்தி தொழிற்சாலையை கண்டு பிடித்ததாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# அமரர் சண்முகதாஸ் ஆற்றிய பணிகள் எமது மனங்களை விட்டு அகலா

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜன. 5
அமரர் சடாட்சர சண்முகதாஸ் பல இடங்களிலும் தகுதி வாய்ந்த உத்தியோகத்தராகவும் அதிகாரியாகவும் ஆற்றிய அரும்பணிகள் எம் மனங்களைவிட்டு என்றும் அகலாமல் நிலவும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் அமரர் சி. சடாட்சர சண்முகதாஸின் 31ஆவது நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்தியபோது இவ்வாறு கூறினார்

அஞ்சலிக் கூட்டம் கடந்த 30 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பேராசிரியர் வி. சிவசாமி தலைமையில் நடைபெற்றது. அமரர் சடாட்சர சண்முகதாஸ் அஞ்சலிக்கூட்ட அமைப்புக் குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் அரச அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

நிர்வாக சேவையில் தமிழர்களின் எண்ணிக்கை குறைகிறது; நிர்வாக இடைவெளியும் கூடுகிறது. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற நோக்கில் தமிழ் மக்களின் துன்ப துயரங்களைத் தீர்ப்பதற்காக வடக்கு - கிழக்கு மாகாண சபையில் சேவையாற்றினார் அமரர் சண்முகதாஸ்— என்றார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைதியாகராஜா உரையாற்றுகையில் கூறியதாவது;

அண்மையில் யாழ் விஜயம் மேற்கொண்டிருந்த அமரர் சடாட்சரசண்முகதாஸ் இடம்பெயர்ந்த பாடசாலைகள் எதிர்நோக்கும் கஷ்டங்களை நேரில் வந்து பார்வையிட்டார். அதன்பின் பல திட்டங்களை இதற்கெனத் தீட்டி திருகோணமலைக்குச் சென்றதும் உடனடியாக 90 லட்சம் ரூபா கல்வி அமைச்சிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்திருந்தார். அவர் போட்ட இத்திட்டங்கள் நிறைவேறிவரும் இக்காலகட்டத்தில் அத்திட்டங்களை அவர் பார்வையிட முடியாது போய்விட்டது பெரும் கவலைக்குரியது— என்றார்.

முன்னதாக மங்கள விளக்கை அமரர் சி. சடாட்சரசண்முகதாஸின் உறவினரான திரு. ஐ. இராமச்சந்திரன் ஏற்றினார். அமரரின் உருவப் படத்திற்கு தீவுப் பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வ. பாலசுப்பிரமணியம் மலர் மாலை அணிவித்தார்.

இந் நினைவஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன், உதவித் திட்டப் பணிப்பாளர் திரு. ந. மகாலிங்கம், யாழ்.— நல்லூர் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன், வேலணை ஊர்காவற்றுறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. நா. சுந்தரலிங்கம், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம், யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை, யாழ். பல்கலைக் கழக முதுநிலை விரிவுரையாளர் திரு. குணசீலன், வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. மாசிலாமணி, தீவக மக்கள் நலன் காக்கும் கழகத்தைச் சேர்ந்த திரு. ஐயாத்துரை, புங்குடுதீவு மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் வைத்திய ஆ. பேரின்பநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (க-4)

# அடுத்த வாரம் ரணிலின் திருமணம்!

கொழும்பு, ஜன. 5
எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. கவின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 11 ஆம்திகதி திருமணம் செய்து கொள்வார்.

ரணிலுக்கும் அவரது எதிர்கால மனைவி மைத்திரி விக்கிரமசிங்காவுக்கும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அவரது துணைவியார் எலினா ஜெயவர்த்தனாவும் கடந்த வாரம் இரவு விருந்துபசாரம் ஒன்றை அளித்தனர். (உ)

# கம்பன் கழகத்தில் கண்டனக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 5
எட்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு ஈழத்தில் இருந்து சென்ற தமிழ் அறிஞர்கள் அவமரியாதை செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட செயலைக் கண்டிக்கும் கண்டனக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் [illegible] கொள்ளுமாறு கம்பன் கழகம் [illegible] (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## புலிகளின் குரல் வானொலியில்

05 — 01 — 1995
வியாழன் இரவு

- ★ 8-01 — ஊர் சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — குயிலோசை— ந. கிருஷ்ணா எழுதிய ''வீரம் விளையும் முல்லை மண்'' கிராமிய நிகழ்வு
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தாயகப் பாடல்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

06 — 01 — 1995
வெள்ளி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40— நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

வியாழன் மாலை ஒலிபரப்பு

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சி கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும் — கூர்வேலன் எழுதிய ''உன்னதமான உறவுகள்''
- ★ 5 50 — தமிழீழ கானங்கள்
- ★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
- ★ 6-02 — பொன்விளையும் பூமி — தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வழங்கும் நிகழ்ச்சி
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — விளையாட்டுத் தொடர்பான கேள்வி—பதில்
- ★ 6-25 —என் தெரிவு
- ★ 6-30 மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

# பேச்சாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5
கந்தர்மடம் ஸ்ரீசிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில்இடம் பெற்றுவந்த திருமந்திரத் தொடர் விரிவுரைப் பூர்த்தியும், அதனையொட்டிய விழாவும் இன்று வியாழக்கிழமை, பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்த வேள் சுவாமிகளின் விழாவுக்கு தலைமை வகிப்பார்.

திருமந்திர விரிவுரையாற்றி வந்த பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், திரு. சிவ. மகாலிங்கம் விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.

இன்றைய நிகழ்வின், சிறப்புச் சொற்பொழிவாக, ''திருமந்திரமும் திருக்குறளும்ஒப்பு நோக்கல்'' என்ற தலைப்பில் திரு. சிவ. மகாலிங்கம் உரையாற்றுவார். (ஐ)

# வாகனம் திருத்தும் நபர் வவுனியாவில் சுட்டுகொலை!

கொழும்பு, ஜன. 5
வவுனியா வைரவப் புளியங்குளத்தில் வைத்து கடந்த சனி இரவு 8-30மணியளவில் வாகனங்களைத் திருத்தும்''மெக்கானிக்'' ஒருவர் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த சரவணை பாலசிங்கம் (வயது 40) என்பவரே கொல்லப்பட்டார்.

தனது கடைக்கு எதிரே உள்ள கடையில் நுளம்புச் சுருள் ஒன்றை வாங்கிக் கொண்டு திரும்பும் போது சைக்கிளில் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் இருவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும்—

அதனால் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது கொலை தொடர்பாக வவுனியா பொலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## மட்டக்களப்பில்

# வேட்டு தீர்த்து புத்தாண்டை வரவேற்ற படையினர்!

கொழும்பு, ஜன. 5
மட்டக்களப்பில் படையினர் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்து புத்தாண்டைக் கொண்டாடினார்கள்.

சரியாக நள்ளிரவு 12-00 மணிக்கு துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்க ஆரம்பித்தன.

பொது மக்களின் பட்டாஸ் வெடிச் சத்தத்துடன் துப்பாக்கி வெடிச் சத்தங்களும் சேர்ந்து நகரை அதிர வைத்தன.

குறிப்பிட்ட நேரத்தில் இந்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்க ஆரம்பித்ததால் பொது மக்கள் நிலைமையைப் புரிந்து கொண்டு பதற்றம் அடையாமல் இருந்தனர்.

வழமையாக மாலை நேரத்துடன் வீடுகளுக்குள் முடங்கிக் கொள்ளும் பொதுமக்கள் அன்று நள்ளிரவுக்குப் பின்னரும் வீதிகளில் நடமாடியதைக் காணக்கூடியதாக இருந்ததாம். (இ)

## தபால் பகுதியைச் சேர்ந்த

# 200 அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை!

கொழும்பு. ஜன 5
தபால் பகுதியில் பல்வேறு பதவிகளை வகிக்கும் 200 அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உயர் பதவிகளில் உள்ளவர்களும் சாதாரண தரத்தில் உள்ளவர்களும் இவர்களில் அடங்குவர். தபால் மா அதிபர் எச். எம். எஸ். கொட்டகதெனிய இதைத் தெரிவித்துள்ளார்.

தபால் பொருள்களைத் துஷ்பிரயோகம் செய்தமை, ரத்துச் செய்யப்பட்ட முத்திரைகளைப் பயன்படுத்தியமை, அவர்களிடம் வழங்கப்பட்ட ரொக்கப் பணம் குறைந்தமை, முத்திரைகள் குறைந்தமை ஆகியனவே இவர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் ஆகும்.

பொது மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்தவுடன் உடனடியாகவே விசாரணைகள் நடத்தப்பட்டிருப்பதாகத் தபால் மா அதிபர் சுட்டிக்காட்டினார். (ஒ-க)

# உருளைக்கிழங்கு செய்கை யாழ். மாவட்டத்தில்பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5
யாழ். மாவட்டத்தில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கு சில பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய், புத்தூர், உடுவில் போன்ற விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்கே அழுகி பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட இடங்களை யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க பிரிவினர், விவசாய ஆராய்ச்சி பிரிவினர், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், கமநலசேவை திணைக்களத்தை சேர்ந்தவர்கள் போன்றோர் கடந்த 31ஆம் திகதி பார்வையிட்டனர். (க-17)

# 'றாக்கிங்'குக்கு மாணவர் எதிர்ப்பா - ஆதரவா?

கொழும்பு, ஜன. 5
பல்கலைக் கழகங்களில் புதிய மாணவர்களை பழைய மாணவர்கள் ''றாக்கிங்'' செய்வது குறித்து றுகுணு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் மத்தியில் அண்மையில் ஆய்வு நடத்தப்பட்டது.

அப் பல்கலைக்கழகத்தில் ''றாக்கிங்'' நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அப் பல்கலைக்கழக விரிவுரையாளர் [illegible] மெண்டிஸ் இந்த ஆய்வை நடத்தி இருந்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக மருத்துவ பீட மாணவர்களிடம் ''றாக்கிங்'' சம்பந்தமாக ஆய்வுகள் நடத்தப்பட்டன.

20 கேள்விகளுக்கு அவர்கள் அளித்திருந்த பதிலின் அடிப்படையில் ''றாக்கிங்'' குறித்து பல்கலைக்கழக மாணவர்கள் கொண்டுள்ள கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவையாவன;

★ 85 சதவீதமானோர் ''றாக்கிங்''கை நிறுத்த பொலீஸார் பல்கலைக்கழகத்துக்குள் வரக் கூடாது என்கின்றனர்.

★ 79 சதவீதமானோர் ''றாக்கிங்'' ஓர் எல்லைக்குள் விரும்பத்தக்கது என்கின்றனர்.

★ 60 சதவீதமானோர் ''றாக்கிங்''கை தடை செய்ய வேண்டும் என்பதை எதிர்க்கின்றனர்.

★ ''றாக்கிங்'' சம்பந்தமாக மாணவர்களின் கருத்துக் கேட்டு கடைசியாக வினாக்கள் கையளிக்கப்பட்ட சமயம் 46 சதவீதமான மாணவர்கள் ''றாக்கிங்''குக்கு ஆளாகிக் கொண்டிருந்தனர். 54 சதவீதமான மாணவர்கள் ''றாக்கிங்'' செய்து கொண்டிருந்தனர்.

'றாக்கிங்' தங்களுக்கு நண்பர்களைப் பெற்றுக் கொடுத்துள்ளது என்று ''றாக்கிங்''குக்கு உட்பட்ட மாணவர்கள் சிலர் கருத்துத் தெரிவித்தனர். (இ)

## கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு

# வவுனியா பெண்ணின்குருதி ஸ்கொட்லண்ட்யார்ட்டுக்கு!

கொழும்பு, ஜன. 5
கிராண்ட்பாஸில் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா கொல்லப்பட்ட சம்பவத்துக்குக் காரணமான— தற்கொலைத் தாக்குதலை நடத்திய —பெண்ணின் சகோதரி எனக்கருதப்படும் ஒருவரின், மாதிரி இரத்தத்துடன் இரகசிய புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் ஸ்கொட்லண்ட்யார்ட் சென்றுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

புஸ்பமாலி என்ற பெண்ணே இந்தத் தற்கொலைத் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றன,

சம்பந்தப்பட்ட பெண் குறித்து அந்தப் பெண்ணின் [illegible] சிலரை சி. ஐ. டியினர் விசாரித்தபோது அப்பெண்ணின் இரு சகோதரிகள் வவுனியாவில் வசிப்பது கண்டு பிடிக்கப்பட்டதாகவும்—

அவர்களில் ஒருவரான ஜெனட் என்ற பெண்ணின் மாதிரி இரத்தத்துடன் இரகசியப் பொலீஸ் அதிகாரி பந்துல விக்கிரமசிங்க ஸ்கொட்லண்ட்யார்ட் சென்றுள்ளதாகவும் —

குண்டு வெடித்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்டு ஸ்கொர்ட்லண்யார்ட்டுக்கு அனுப்பப்பட்ட — சம்பந்தப்பட்ட— புஸ்பமாலியின் இரத்தத்துடன் இந்த மாதிரி இரத்தத்தையும் ஒப்பிட்டு வவுனியாவில் வசிக்கும் ஜெனட்டின் சகோதரியான — புஸ்பமாலி தான் இக்குண்டு வெடிப்பை நடத்தினரா என்று அறிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும்—

இரகசியப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)

## சின்னஞ் சிறு விளம்பரம்

**கலண்டர்கள்**

சகல விடுமுறை நாட்களும் [தமிழீழம் உட்பட] அடங்கிய அழகிய படத்துடனான கலண்டர் 5/50 மட்டுமே. பெரிய நடுத்தர கலண்டர்களும் பதிப்பித்தும் சிலிப் வகைகள் தனியாகவும் பெற்றுக் கொள்ளலாம். இலங்கயன் பதிப்பகம். பதிப்பக சாலை, ராஜா தியேட்டர் அருகில், யாழ்ப்பாணம். (34367)

**விலை குறைத்துள்ளோம்**

மெய்கண்டான், ஒப்சேர்வர் டயறி, றிச்சாட் அன் கொம்பனி டயறிகள் விலை குறைத்துள்ளோம். உடன் பெற்றுக் கொள்ளவும். பொருளியல் நோக்கு ஏக விநியோகஸ்தர்கள்: மக்மிலன் புத்தகசாலை, ஸ்ரீ காந்தா புத்தகசாலை யாழ்ப்பாணம். [சி-97]

**G. A. Q. — B. A.**

தமிழ் இலக்கணம் வினா-விடை, பத்மாவதி சரிதம்- அ. மாதவ ஐயர், சிலப்பதிகாரம் - கானல்வரி தடலாடு காதை.பாடலும்விளக்கவுரையும் புறநானூறு 1 முதல் 20 வரை. அகநானூறு, கண்ணப்பநாயனார் புராணம் வெளியீடு; உயர் கல்வி நிறுவனம். விற்பனையாகிறது: பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-87]

**மணமகன் தேவை**

17-2-52 சுவாதி, 2ஆம் பாதம் செவ்வாய் தோஷமற்ற B.A. ஆசிரியைக்கு இந்து, அரச உத்தியோக மணமகன் தேவை. சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்: அபிராமி திருமண சேவை, சாவகச்சேரி. [33486]

5-12-54 உத்தரட்டாதி 4ஆம் பாதம், செவ்வாய் தோசமற்ற B. Com. ஆசிரியைக்கு அரச உத்தியோகமுள்ள மணமகன் தேவை. தொடர்பு கொள்க: அபிராமி திருமண சேவை, சாவகச்சேரி. [34487]

## மார்ச் மாதம் பல பரீட்சைகள்

கொழும்பு, ஜன. 5

ஜனாதிபதி தேர்தல் காரணமாக கடந்த ஆண்டு ஒத்தி வைக்கப்பட்ட நிர்வாக சேவை, எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் ஆகிய சேவைகளுக்கான போட்டிப் பரீட்சைகள் மார்ச் மாதத்துக்கு முன்னர் நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஆர்தர் வெதமுல்ல அறிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் ஜி.சி.ஈ. பரீட்சைகள் உட்பட 200பரீட்சைகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)


## நொதேண் கல்வி நிலையம்

யாழ். சுண்டிக்குளி.

ஆண்டு 5 முதல் O/L வரை

புதிய பிரிவு வகுப்புகள்

ஆரம்பம்: 05-01-1995 (இன்று)

(34520)

## ST. JOHN'S INSTITUTE FOR CAREER GUIDANCE COMPUTER STUDIES

கீழ்வரும் பகுதிகளுக்கான புதிய வகுப்புக்கள் 07 — 01 — 1995 மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

1. G W BASIC (2½ Months)
2. PASCAL (3 Months) பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவருக்கு.

★ தமிழ் மாணவர்கள் கணனி அறிவில் பின் தங்கியவர்களாக காணப்படக்கூடாது என்ற நோக்கில் செயற்படுகின்றது.

பதிவாளர்,
பரி. யோவான் ஆலயம்.
சுண்டிக்குளி.

[சி-104]

## தேவை

**மொழிபெயர்ப்பாளர்கள்**

ஆங்கிலப்புத்தகங்களை தமிழில் மொழிபெயர்க்கக் கூடிய ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

**மொழிபெயர்ப்பாளர்கள்**

ஆங்கிலத் திரைப்படங்களின் வசனங்களை ஆங்கிலத்திலேயே எழுதி தமிழில் மொழிபெயர்க்கக் கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும்.
மொழிபெயர்ப்பு வசனங்களை திரைப்பட வசன நடைக்கு மாற்றும் ஆற்றலுடையவராக இருத்தல் வேண்டும்.

**VDO/ODO பதிவு செய்பவர்கள்**

VDO/ODO பதிவு செய்யும் தொழில்நுட்ப அறிவு உடையவராகவும் இலத்திரனியலில் ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

**குரல்கொடுப்பவர்கள்**

தமிழாக்கம் செய்யப்பட்ட திரைப்படங்களுக்கு குரல் கொடுக்கக்கூடிய குரல் வளம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**தட்டச்சாளர்கள்**

(ஆங்கிலம்/ தமிழ்)

தெரிவுசெய்யும் மொழியில் ஆற்றல் உடையவராக இருத்தல் வேண்டும்.

* இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
* தகுதிக்கேற்ப வேதனம் வழங்கப்படும்
* முடிவு திகதி 11 - 01 - 1995

விளம்பர இல: 714,
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

(34511)

## இலங்கை நூலகச் சங்கம்

# நூலகவியல்

* **1995/96 முதல் வருட வகுப்புகள்**
  அனுமதிக்குரிய தகைமை - க. பொ. த. உயர் தரத்தில் மூன்று பாட சித்தியும், சாதாரண தரத்தில் ஆங்கில சித்தியும், நூலக ஊழியராயின் - சாதாரணதரத்தில் ஆறு பாட சித்தியும் (ஆங்கிலம் உட்பட) மூன்று வருட சேவையும்.
* **முதல் வருடப் பரீட்சை**
  மீண்டும் 1995 மே மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.
* **இடைநிலை வகுப்புகள்**
  முதல் வருடப் பரீட்சையில் 3 - 4 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க.
* முதல் வருட - இடைநிலை வகுப்புக்கள் மாசி மாதத்தில் ஆரம்பமாகும்.
* **31 — 01 — 1995** க்கு முன் வகுப்புகளுக்கு விண்ணப்பிக்க.

விவரம் நேரில்:
கா. மாணிக்கவாசகர்,
யாழ். மத்திய கல்லூரி

[34510]

## பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில் மார்கழி மாத

# ★ 2-ம் திருவிழா விஞ்ஞாபனம் ★

கார்மேகம் மடியிறங்கும் கருடன்கள் மலர் தூவும்
மாலையொடு வேளை வந்து தாள் பணியும்
நல்ல ஆழ்கடலின் ஒலி கேட்கும் அலை வந்து அடி அளிக்கும்
தாளைமடல் வெடித்து மலர் மனங்கமழும்
காட்டருகோர் கருநாகம் படம்பிடித்துப் பறந்தாடும்
பரந்தாமன் கீழ்ப்படுக்கக் குடையாக மாறும்
இது சங்கோடு சக்கரமும் நாமமும் நமைக் காக்கும்
கண்ணாளன் கண்ணனின் பொன்னாலைக் கோயில்

ஆக்கியோன்: மூளாயூர் ஆசுகவி, சிவசுப்பிரமணியம்

(34506)

## "A" LEVEL CENTRE

1st LANE POINT - PEDRO ROAD, JAFFNA.

✶ சிங்கள வகுப்பு ✶

ஆரம்பம்: **07 - 01 - 1995**

Sat. & Sun. 8-00 – 9-00 a. m.

ஆசிரியர்: **MISS A. ALISTA**

குறிப்பு:
மாணவரின் வருகைக்கேற்ப நேரங்கள் மாற்றி அமைக்கப்படும்.

[சி-49]

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை, சுன்னாகம்.

### க. பொ. த. (உ. த.) 97ஆம் ஆண்டுக்கான அனுமதி

1997ஆம் ஆண்டுக்கான க. பொ த (உ. த.) கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவுகளுக்கான வகுப்புக்கள் 12-01-95இல் ஆரம்பமாகின்றன, இவ்வகுப்புக்களில் சேருவோர், 09-01-95 இற்கு முன் விணணப்பங்களை அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

- அதிபர்.

05-01-95 (சி-5758)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு: | | இறப்பு: |
|---|---|---|
| 12-9-1926 | ✝ | 5-1-1992 |

திருமதி
**சின்னராணி J. P. பெர்னாண்டோ**

(உரிமையாளர் J. P பெர்னாண்டோ அன் சன்ஸ்
287/1, செட்டித்தெரு கொழும்பு - 11
சரஸ்வதி கபே கொழும்பு - 11)

கணவன் உம் நினைவிற்
காலமெல்லாம் கலக்கமுற
மணவினையிற் பெற்ற
மக்கள் மனம் கலங்க
உணர்வுறு மக்கள் தம்
உயிர் மருகன் ஏக்கமுற
கணத்தினிற் பிரியா
கவின் பேரர் கனலுருக்க
குணமுறு சோதர
சோதரிகள் கூவியழ
வணங்குறு நின்வதனம்
வருடம் மூவாண்டு சென்றும்
இணங்கிரிய கல்லாய்
இரக்கமின்றிச் சமைந்ததென்ன.

உமது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும், கொச்சிக்கடை அந்தோனியாரை பிரார்த்திக்கும்;

வ. இலங்கராஜசிங்கம்
குடும்பத்தினர்
வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.

ஓரன் ரேட்ஸ்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-252)

உ
ஓம் சாய் ராம்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
**சின்னத்துரை சின்னத்தங்கச்சி**

| பிறப்பு; | இறப்பு: |
|---|---|
| 13-10-1913 | 06-12 1994 |

ஐயனார் கோயிலடி மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னத்துரை சின்னத்தங்கச்சி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04-01-95 அன்று வில்லூண்டிக் கடற்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று 05-01-95 இல்லத்திலும் நடைபெற இருப்பதால், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்,

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாயிராம்

பிள்ளைகள், மருமக்கள்.

[illegible]

(சி-5760)


## WANTED

எமது உரும்பிராய் கிளைக்கு

தமிழ் & ஆங்கிலம் ] தட்டச்சு, சுருக்கெழுத்து

### ஆசிரியை தேவை

உங்கள் விண்ணப்பங்களை
அனுப்ப வேண்டிய முகவரி:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14 St. Peter's Lane, Jaffna.

[சி-110]


## அரசாங்க ஓய்வூதியர் சங்கம் காரைநகர்

# பொதுக்கூட்டம்

**இடம்:**
காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயம். மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயில் முன்பாக), யாழ்ப்பாணம்.

**காலம்:**
07 — 01 — 1995, சனிக்கிழமை மு. ப. 10-00 மணி முதல்

**விடயம்:**
கூடிய ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் ஏற்படும் ஐயப்பாடுகள் தனிப்பட்டோரின் ஓய்வூதியப் பிரச்சினைகள் ஆகியன பற்றி ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கை எடுக்கவும், சென்றகால, வருங்கால சங்க நடவடிக்கைகள் பற்றி ஆராயவும்,

காரைநகர் வாழ் ஓய்வூதியர்கள் எல்லோரையும் சமுகம் தரவேண்டுமென்று அன்புடன் அழைக்கிறோம்.

சந்தாப்பணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

மூ. வேலுப்பிள்ளை — தலைவர்.
க. கணபதிப்பிள்ளை — செயலாளர்.

6, 4ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (34521)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஆங்கிலப் போதனாசிரியர் தரம் II. பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1995-01-27 வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**
ரூபா 4,750 — 10x 130 — 6,050/- மாதமொன்றுக்கு.

சம்பளத்திற்கு மேலதிகமாக 10,000/- ரூபா படியும் வருடாந்த அடிப்படைச் சம்பளத்தின் 10 சதவீதமும் அடிப்படைப் படியாக காலாண்டுத் தவணைப் பணங்களாக ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்தில் கொடுப்பனவு செய்யப்படும்.

9/93ஆம் இலக்க 1993 மே 12ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி 600/- மாதாந்தப்படி கொடுப்பனவு செய்யப்படும்.

**தகைமைகள்:**

1. ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கொண்டு பொது / சிறப்புப் பட்டத்தில் சித்தி.
   அல்லது
2. ஆங்கில மொழி மூலம் பொது / சிறப்புப் பட்டத்தில் சித்தி;
   அல்லது
3. ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையுடன் பொது / சிறப்புப்பட்டத்தில் சித்தி.
   அல்லது
4. உயர்கல்வி நிறுவனத்தின் சிபார்சின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கக்கூடிய அத்தகைய வேறு தகைமைகள்.

தெரிவு தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சையின் மூலமும்

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கியில் அல்லது நிதிக்கிளையின் சிறாப்பரின் முகப்பு மேசையில் செலுத்தி இப்பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், இதர விவரங்களையும் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் / நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியுடைய காசுக் கட்டளை / தபாற் கட்டளையை 23x10 ச.மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்களிலும் அரச கூட்டுத்தாபனங்களிலும் நியதிச் சட்ட சபைகளிலும் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

முடிவு திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் அளிக்கப்பெற்ற விவரங்கள் தெளிவற்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**முக்கிய குறிப்பு:**
மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பங்களையும், இதர விவரங்களையும் கொழும்பு - 13, ஆட்டுப்பட்டித் தெரு, யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்,

யாழ்ப்பாணப் -
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-12-19.

(சி-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## இரண்டாம் கட்டப் பேச்சு

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று முன்தினம், செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

கடந்த நாலரை வருடகாலமாக தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிப்படைந்துள்ளது. முந்திய அரசு நாளுக்கு நாள் போரைத் தீவிரப்படுத்தியதே அன்றி சமாதானத்தையும் அமைதியையும் உருவாக்குவதில் அக்கறை செலுத்தவில்லை. அதனால் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கை சீர்கெட்டுப் போயுள்ளது.

இதன் காரணமாக, அமைதியை உருவாக்குவதற்கும் சரி, சமாதானத்தை உண்டாக்குவதற்கும் சரி மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு மீட்டெடுப்பது அத்தியாவசியமாகிறது. அவர்களின் தற்போதைய அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும் விதத்தில் பல வசதிகளைச் செய்ய வேண்டியுள்ளது.

மக்களுக்குரிய அன்றாடத் தேவைகளை, வசதிகளைச் செய்வதற்குப் போர் நிறுத்தம் இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. போர் தொடர்ந்து கொண்டிருக்கும் போது, இராணுவ நடவடிக்கைகள் தொடரும்போது, அன்றாட வசதிகளுக்கான வேலைகளைச் செய்வது இயலாத காரியம். போரை நிறுத்தாமல் புனர்நிர்மாண, புனர்வாழ்வுப் பணிகளை செய்ய முனைவதும் அர்த்தமற்றதும், பயனற்றதும் ஆகிவிடும்.

எனவே தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து, அவர்களுக்கு இயல்பு நிலை வாழ்க்கையை உருவாக்குவதும், போர் நிறுத்தமும் ஒன்றுடன் மற்றது தொடர்புடையதாகும்.

முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்பிருந்தே, விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தின் அவசியத்தை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இது விடயத்தில் அரசு மிகவும் மெதுவாகவே நகர்ந்தது. அந்த நிலையை ஒருவாறு மாற்றிக் கொண்டு, யதார்த்தத்தை உணர்ந்து, மோதல் தவிர்ப்புக்கு உடன்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

ஆனால் மோதல் தவிர்ப்பை ஓர் ஆரம்பமாகக் கொண்டு மிக விரைவில் முழுமையான யுத்த நிறுத்தத்தை உருவாக்க வேண்டும். மோதல் தவிர்ப்பை நீடித்துக் கொண்டு போக நினைக்கக் கூடாது. மேலும் —

பாப்பரசரின் இலங்கை விஜயத்தோடு மோதல் தவிர்ப்பையோ, போர் நிறுத்தத்தையோ தொடர்புபடுத்திப் பார்க்கக் கூடாது. பாப்பரசர் விஜயத்தை மனதில் வைத்து, அதனைக் கருதி இவ்விடயங்களை கையாளக் கூடாது. அவ்வாறு செய்ய முனைந்தால் இவை யாவும் தற்காலிக ஏற்பாடுகள் ஆகிவிடும்.

புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், அபிவிருத்தி, கடல் வலயத் தடையை நீக்குதல், பொருளாதாரத் தடையை முற்றாக நீக்குதல், இடம்பெயர்ந்தோரை மீளக்குடியேற்றுதல் — என்ற எல்லாவற்றுக்கும் போர் நிறுத்தம், போக்குவரத்துப் பாதையைத் திறத்தல் ஆகிய இரண்டு அம்சங்களுமே ஊன்றுகோல்களாக நிற்கின்றன. இந்தக் கொடிகள் தாவிப் படர்ந்து வளர்வதற்கு போர்நிறுத்தம், பாதை திறத்தல் ஆகியன பிரதான கொழுகொம்புகள் என்றும் உவமானம் செய்யலாம்.

எனவே மோதல் தவிர்ப்பு மிக விரைவில் முழுமையான நிரந்தரமான போர்நிறுத்தமாகச் செயலுருப் பெறுவது அவசியம். போக்குவரத்துப் பாதையும் திறக்கப்பட வேண்டும். இது விடயத்தில் அரசு விரைந்து செயற்பட வேண்டும்.

உலக வங்கியைத் திருப்திப்படுத்துவதற்காக வடக்கு-கிழக்குப் புனர்நிர்மாணத்தைத் துரிதப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு என்பதனை அறிய முடிகிறது. ஆகையால் அரசு நிதானமாக, நியாயமாகச் செயற்படும் என்று நம்பலாமா?

---

தமிழாராய்ச்சி மாநாட்டை ஒட்டி பாதுகாப்பு:

# தமிழக கரையோரத்தில் தீவிர தேடுதல்

# ஈழ அகதிகள் மீதும் கெடுபிடிகள்

இராமநாதபுரம், ஜன. 5

தஞ்சாவூரில் நடைபெறும் எட்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் ஊடுருவலாம் என்ற சந்தேகத்தின் பேரில் தமிழகத்தின் கரையோரப் பகுதிகளில் தமிழகப் பொலீஸார் திடீர் சோதனைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம் அகதி முகாமில் உள்ள ஈழத் தமிழ் அகதிகளும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

### இரவு பகலாக பொலீஸார் ரோந்து

முகாமுக்குள் நுழையும் போதும் அங்கிருந்து திரும்பும் போதும் ''மெட்டல் டிடெக்டர்'' மூலம் அவர்கள் சோதனை செய்யப்படுகின்றனர் அத்துடன் அகதி முகாமில் உள்ள அனைவரும் அங்கு தங்கியுள்ளனரா என்பதையும் பொலீஸார் நாளாந்தம் அவதானித்து வருகின்றனர்.

மண்டபம் அகதி முகாம் அமைந்துள்ள பகுதியில் நவீன ஆயுதம் ஏந்திய பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். பெண் பொலீஸாரும் அப்பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலீஸார் இரவு பகலாக நடந்தும், சைக்கிளிலும் ரோந்துப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதியில் கரையோரக் காவல்படையினரும் இடைவிடாது ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடற்படையின் கடலோரக் காவல்படை விமானங்கள், ஹெலிக் ஹொப்டர்கள் வழமையை விடத் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சோதனை நிலையங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் அனைத்தும் சோதனையிடப்படுகின்றன.

விடுதிகளில் வெளிநாட்டவர்கள் தங்கியுள்ளனரா என்பதை அறிவதற்காகப் பொலீஸார் திடீர் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## சோதிடர் இடைநிலை தேர்வு

யாழ்ப்பாணம், ஜன. 5

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் சோதிட பயிலரங்குகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கான இடைநிலைத் தேர்வுப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும் என பரீட்சை இணைப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான திரு எஸ். வேலாயுதம் அறிவித்துள்ளார். (ஐ)

## தொழிநுட்ப உத்தியோகத்தர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்கள் இம்மாத இறுதியுடன் மூடப்படுவதை அடுத்து, அவ்வலுவலகங்களில் பணியாற்றிய 18 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு ஜனவரி முதல் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் திரு. சொ. கணேசநாதன் இவர்களது இடமாற்றம் தொடர்பான கடிதங்களை அனுப்பியுள்ளார், 18 பேரில் 4 பேர் படவரைஞர் தரத்திலும், எஞ்சியோர் தொழில்நுட்ப உத்தியோகஸ்தர் தரத்திலும் உள்ளனர். (க-3)

# பூரண தன்னாட்சி அதிகாரங்கள் வட-கிழக்கு மக்களுக்கு வேண்டும்!

### விக்கிரமபாகு கருணாரத்தினா சொல்கிறார்

கொழும்பு, ஜன. 5

''வடக்கு — கிழக்கு மக்களுக்கு பொலீஸ் அதிகாரம் உட்பட பூரண தன்னாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். முஸ்லிம் மக்களுக்கென தனியான ஒரு பிரதேசம் ஒதுக்கப்படுவதுடன் தமிழ் பகுதிகளில் வசிக்கும் சிங்களவர்களுக்கு, தற்போது கொழும்பில் வசிக்கும் தமிழர்களுக்குள்ள சகல உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்.''

நவசம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தினா ''திவயின'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தற்போது எடுக்கப்படும் பேச்சுக்கள் வெற்றி அளிக்குமா என அவரிடம் கேட்கப்பட்டபோது —

பேச்சு வார்த்தை வெற்றியளிக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பின் பேச்சுக்களை முதலில் ஆரம்பித்தவர்கள் பிறகு பின்னடிக்கத் தேவையில்லையே.

அரசாங்கம் உரிய தீர்வினை முன்வைக்காது பேச்சுக்களில் ஈடுபடுவதில் அர்த்தமில்லை. இந்நிலை நீடித்து இறுதியில் யுத்தத்தின் மூலம் தீர்வுகாண அரசு நினைக்குமானால் அது தனக்குத் தானே கல்லறை அமைப்பதற்குச் சமனாகும்.

யுத்தம் முன்னெடுக்கப்படுமாயின் சமாதானம் பற்றிப் பேசிவந்த இடதுசாரிகள் அரசுடன் தொடர்ந்தும் ஒட்டிக் கொண்டிருக்க முடியாது என்று பதிலளித்தார் திரு. விக்கிரபாகு கருணாரத்தினா. (ஐ-10)

தாக்குதல்கள் அதிகரித்திருப்பதை அடுத்து

# மட்டக்களப்பில் இராணுவ முகாம்கள் மேலும் பலப்படுத்தப்படுகின்றன

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ முகாம்கள் மீது அண்மையில் நடத்தப்பட்ட பெரும் தாக்குதல்களை அடுத்து—

இப்பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வருகிறது. சோதனை நிலையங்களில் சோதனை நடவடிக்கையும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருவதால், காட்டுப் பகுதிகளில் உள்ள படை முகாம்களின் எல்லைகள் பலப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முக்கிய முகாம்களின் எல்லைகளில் இராணுவத்தினரின் பலம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் விழிப்புடன் வைக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களின் காவலரண்கள் மண் மூடைகள் அடுக்கப்பட்டு மேலும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

சந்தேகத்துக்கு இடமானோர், சோதனை நிலையங்களில் விசாரிக்கப்படுகின்றனர். பொதிகள் துருவித் துருவி ஆராயப்படுகின்றன.

---

# ஆண்டின் நாயகி என சந்திரிகாவுக்கு புகழாரம்!

### சவுதி பத்திரிகை கௌரவிப்பு

கொழும்பு, ஜன. 5

இந்த ஆண்டின் நாயகியாக ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு கிரீடம் சூட்டியிருக்கிறது சவூதி அரேபியாவின் மிகப் பழமையான ஆங்கில நாளிதழான ''சவூதி கஸெட்''.

கடந்த வாரம் அதன் வார இதழின் முன்பக்கத்தில் சந்திரிகாவின் படத்தைப் பிரசுரித்து ஸ்ரீலங்காவின் நம்பிக்கை நட்சத்திரம் என்ற புகழாரம் சூட்டி, இந்த ஆண்டின் நாயகி என்ற பட்டத்தை அவருக்கு வழங்கி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாண சந்திரிகா துணிச்சலுடன் முயற்சி எடுத்திருப்பதாகவும் அப்பத்திரிகை வர்ணித்தது. [உ]

# தப்பியோடிய படையினரே கொள்ளை முயற்சியில் பலி!

கொழும்பு, ஜன. 5

கடந்த வாரம் முல்லேரியாவில் நடந்த கொள்ளைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் என தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லேரியா சந்தியில் நடந்த கொள்ளை முயற்சியை முறியடித்த பொலீஸார் ஓட்டோ ஒன்றை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டிருந்தனர்.

கொல்லப்பட்ட இருவரும் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-3]

# சூழல் பாதுகாப்புக்கென உலகவங்கி நிதியுதவி

### 4 கோடி டொலர் கிடைக்கும்

கொழும்பு, ஜன. 5

சூழல் பாதுகாப்புக்காக உலக வங்கி இலங்கைக்கு 40 மில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்கியுள்ளது

நாட்டின் சூழல் பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்பை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

வீதிகள், மயானங்கள் இந்த நிதியில் இருந்து புனரமைக்கப்படவிருக்கின்றன. (ஒ-3)

# விமானப்படை அதிகாரி ஊழலில் சிக்கினார்!

கொழும்பு, ஜன. 5

விமானப் படையின் உயரதிகாரி ஒருவர் பல கோடி ரூபா பெறுமதியான விவகாரம் ஒன்று தொடர்பான ஊழலில் சிக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரி சேவையிலிருந்து ஓய்வு பெற விண்ணப்பித்ததாகவும் [illegible] ஆனால் சில முக்கிய [illegible] காரணங்களுக்கு அவர் பதிலளிக்க வேண்டியிருப்பதால் அதுவரை அவரது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என அவருக்கு உயரதிகாரிகள் மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-உ)

## தொலைக்கல்வி அமர்வுகள்

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இயங்கும் தொலைக்கல்வி நிலையத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் சகல பிரிவினருக்குமான அமர்வுகள் நடைபெற இருப்பதால் போதனாசிரியர்களையும் [illegible] ஆசிரிய மாணவர்களையும் [illegible] தவறாது சமுகந்தருமாறு [illegible] போதனாசிரியர் [illegible] தெரிவித்துள்ளார். (ஐ)

---

ஸ்ரீலங்கா அரசு - புலிகள் இடையேயான

# சமாதானப் பேச்சுக்களை குழப்ப 'றோ'வுக்கு இந்திய அரசு அங்கீகாரம்

*ஸ்ரீலங்கா அரசு — விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக றோவின் நிலைப்பாடு குறித்து 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் எழுதிய கட்டுரையின் முக்கிய பகுதிகள் இங்கு பிரசுரமாகின்றன*

அரசு — விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை புதுடில்லியில் கடும் சர்ச்சைக்குரிய விடயமாக மாறியிருக்கிறது.

கொழும்பின் முன் முயற்சியை ஆதரிக்கின்ற தனது நிலைப்பாட்டை இந்த இரண்டாவது கட்டத்தில் மீளாய்வு செய்ய இந்தியா தீர்மானித்துள்ளது.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதி குமாரதுங்காவுக்கு பிரதமர் ராவ் ஆசிர்வாதம் வழங்கியுள்ள போதிலும்—

அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் — குறிப்பாக வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள்— இந்தியாவின் நிலைப்பாடு குறித்து சந்தோசமற்ற நிலையில் உள்ளனர்.

இந்த விடயத்தில்—

பிரதமர் அலுவலகம், வெளிவிவகார அமைச்சு, 'றோ' ஆகியவை முரண்பாடான கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளன.

அரசின் கொள்கைகளைத் தீர்மானிக்கும் பிரதமரின் அலுவலகம், சமாதானப் பேச்சுக்களை வெளிப்படையாக ஆதரிப்பதாக காட்டிக் கொள்ள முடிவு செய்துள்ள அதே சமயம்—

பேச்சுக்களைக் குழப்பவும், பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோரைக் கொல்லவும் மறைமுகமாக றோவுக்கு அனுமதி வழங்கியுள்ளது என றோவின் கணிப்பீடுகளில் இருந்து தெரியவருகிறது.

சமாதான முயற்சிகளை ஆதரிப்பதாக இந்தியப் பிரதமர் வெளிப்படையாக காட்டிக்கொள்ளாவிட்டால் அது தென்னிந்தியாவின் பாதுகாப்புக்கு ஊறுவிளைவித்துவிடும் என றோ கணித்துள்ளது.

தென்னிந்தியாவின் பாதுகாப்பை சீர்குலைக்க உதவி கேட்டு, பாகிஸ்தான் அரசை விடுதலைப் புலிகள் நாடியிருப்பதாக 'றோ' சந்தேகிக்கிறது.

பகிரங்கமாக இராணுவத் தீர்வை வலியுறுத்தும் இந்தியாவின் நடவடிக்கை, உத்தேச புலிகள் — பாகிஸ்தான் கூட்டுறவை மேலும் வலுப்படுத்துவதாகிவிடும்.

எனவே ஸ்ரீலங்காவில் பேச்சுவார்த்தை நடப்பதை— வெளிப்படையில்— வரவேற்க வேண்டும் என்ற றோவின் ஆலோசனையை பின்பற்ற பிரதமர் ராவ் இணங்க வேண்டியுள்ளது.

### வெளிவிவகார அமைச்சின் நிலை

வெளிவிவகார அமைச்சு விடுதலைப் புலிகளுக்கு எதிராக போர் நடத்துவதைதையே தொடர்ந்து வலியுறுத்துகின்றது.

ஆறுகோடி தமிழர்களைக் கொண்ட இந்தியாவால்—

தமிழீழத்தின் தலைவராக அல்லது ஸ்ரீலங்காவின் வடக்கு - கிழக்கின் முதலமைச்சராக பிரபாகரன் வருவதற்கு இடம்கொடுக்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தனிப்பட்ட முறையில் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்காவின் வடக்கு - கிழக்கில் தனி இறைமையுள்ள அரசாக அல்லது மாகாண அரசாக விடுதலைப் புலிகள் அதிகாரத்துக்கு வந்தால் —

இந்தியாவின் தெற்கு வாசல் படியில் இந்திய நலனுக்கு எதிரான சக்திகள் வேர் விடுவதோடு, தமிழ் நாட்டைச் சீர்குலைக்கச் செய்வதற்கான தாக்குதல் தளமாக யாழ்ப்பாணம் பயன்படுத்தப்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படலாம் என வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் நம்புகின்றனர்.

நீண்டகால விளைவுகளை கவனத்தில் கொண்டு, ஸ்ரீலங்காவில் சண்டை தொடர்வதையே ஆதரிக்க வேண்டும் என்பதே வெளிவிவகார அமைச்சின் நிலைப்பாடாகும்

வெளிப்படையாக தலையிடுவது என்பது பெரும் செலவு மிக்கது என்பதால், பிரபாகரனையும் அவரது உதவியாளர்களையும் மறைமுகமாகக் [illegible] பட வேண்டும் என்பதே [illegible] கணிப்பாக உள்ளது.

இந்தியத் துருப்புக்களை ஸ்ரீலங்காவுக்குள் மீண்டும் அனுப்புவது பெரும் செலவு மிக்க விடயமாகும்.

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தை ''றோ'' மூலம் ஒழித்துக் கட்டும் நடவடிக்கையை வேகப்படுத்தும் தீர்மானத்துக்கு பிரதமர் ராவ் இணங்கியுள்ளார்.

### ராஜீவ் கொலை வழக்கு

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முடிவில் கொலையாளிகளைப் பிடிக்கும்படி நாட்டுக்கு உள்ளேயிருந்தும் வெளியே இருந்தும் காங்கிரஸ் கட்சி அரசுக்கு நெருக்குதல் வரும்.

தற்போது —

காங்கிரஸில் உள்ள ராவ் எதிர்ப்புக் குழு, சமாதான முயற்சிகளை வரவேற்கும் ராவின் முடிவுக்காக அவரை கடுமையாகக் கண்டித்து வருகின்றது.

காமினி திஸாநாயக்காவின் கொலைக்குப் பின்னர் இக்கண்டனம் தீவிரமாகியிருக்கிறது.

கடந்த தேர்தல்களின் பின்னர் ராவின் நிலை பலவீனமாகியுள்ளது. பொது விடயங்களில் பொதுமக்களின் கருத்துக்கு இசைவாகச் செயற்பட வேண்டிய கட்டாயத்துக்கு அவர் உள்ளாகியிருப்பதாக மதிப்பீடு செய்யப்படுகின்றது.

இந்த நிலையில்தான் —

ராஜீவ் கொலை வழக்கு விசாரணைகளையும் இந்திய [illegible] மாறுபடும் போக்கையும் சோனியா ஆதரவுக் குழு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

எச்சரிக்கையாக இருக்காவிட்டால், ராஜீவ் காந்திக்கு ஏற்பட்ட கதியையே ஜனாதிபதி குமாரதுங்காவும் எதிர்கொள்ள நேரிடும் என — ஸ்ரீலங்கா விவகாரங்களில் அறிவு மிக்க — சோனியா காந்திக்கு நெருக்கமான — உதவியாளர் ஒருவர் கூறினார்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி குமாரதுங்க எடுத்த முன் முயற்சி பாராட்டப்படக் கூடியது. என்றாலும் —

பேச்சு மூலமான தீர்வு காணத்தவறினால் ஏற்படக் கூடிய பாரிய விளைவுகளை அவர் புரிந்து கொள்ள வேண்டும்; பயமுறுத்தல் — அரசியல் ரீதியாக அல்லது பொது மக்களிடமிருந்து வராது; புலிகளிடமிருந்துதான்.

பிரேமதாஸா — பிரபாகரன் பேச்சுக்கள் குழம்பியதும் — சமாதானத்துக்கு மாற்றாக — கடுமையான போரே வெடித்தது. தாங்கள் ஏமாற்றப்பட்டதாக கருதும் தலைவர்களுக்கு போரே ஒரே விடையாக இருப்பதை நாம் காண்கிறோம்.

ஸ்ரீலங்காவில் பாதுகாப்புக் கொள்கைகளை இராணுவமே தீர்மானிக்கும் என்ற காலம் முடிவடைந்து விட்டது.

தேசிய பாதுகாப்பை அமுல் செய்வதில் இராணுவத்தின் ஆலோசனையை ஏற்கும் அனைத்துத் தலைவர்களினதும் — ஜெயவர்த்தனா முதல் விஜேதுங்கா வரை அனைவரினதும் — நம்பிக்கை நாசம் தருவது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

இராணுவத்தின் தவறு [illegible] 1983இல் 30 பேர் கொண்ட ஒரு குழுவாக இருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் 10 ஆயிரம் ஆண்களையும், பெண்களையும் கொண்ட—எதிர்க்க முடியாத — சக்தியாக வளர்ந்ததற்கு —

தேசிய பாதுகாப்பு விடயங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த இராணுவம் இரண்டு விடயங்களை மதிப்பீடு செய்வதில் தவறியதே காரணமாகும்.

முதலாவது விவகாரம் இந்திய விடயம். அணிசேரா கொள்கையிலிருந்து ஸ்ரீலங்கா தூர — விலகி — நின்றதால் இந்தியா மற்றும் சோவியத்தின் சீர்குலைக்கும் இலக்காக அது மாறியது.

மரபு ரீதியற்ற யுத்தம் குறித்து — குறிப்பாக ராணுவத் தன்மையல்லாத அதன் செயற்பாடுகள் குறித்து — உரிய அறிவை ஸ்ரீலங்கா இராணுவம் கொண்டிராதது இரண்டாவது விடயமாகும்.

இரு தசாப்த கால வன் செயல்களின் பின்னர், சமாதானத்துக்குத் திரும்புவது என்பது வலியை ஏற்படுத்தும் கஷ்டமான இலக்காக இருக்கும் என்பதோடு —

சுய லாபம், இராணுவ தலையீட்டைப் பின்பற்றுதல் என்பவற்றைத் தவிர்த்து ஓர் உயர்ந்த அரசியல் மறையை பொறுப்பேற்கும் ஒருதேவைப்பாட்டை வலியுறுத்துவதாகவும் இருக்கும்.

ஆழமாக வேர்விட்டிருக்கும் இத்தகைய பிரச்சினைக்கு ஓர் அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் தீர்வு கண்டுவிட முடியாது.

ஸ்ரீலங்காவில் நிலையான சமாதானத் தீர்வுக்கு ஜனாதிபதி குமாரதுங்க முதல் அடியாவது எடுத்து வைத்திருக்கிறார்.

பேச்சுக்கள் மூலம் ஸ்ரீலங்காவில் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவரும் சந்தர்ப்பத்தை தொலைத்து விடக் கூடாது — அதற்கு மாற்று இந்தியப் படையை மீளக் கொண்டு வருவதாக அல்லது இரண்டு பிரிவாகத் துண்டுபடுவதற்கான கடும் போராக அமைந்துவிடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பிப்பிள்ளை செல்லம்மா

சங்குவேலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த திருமதி செல்லம்மா 04-01-1995இல் இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் மனைவியும், காலஞ் சென்ற திருமதி இரத்தினம் மயில்வாகனம், த. இராஜதுரை (ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், மக்கள் வங்கி பிரதான வீதி, யாழ்ப்பாணம்), திருமதி மகிழ்மலர் நடராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் க. மயில்வாகனம், இ. தங்கேஸ்வரி, சி. நடராசா (கோப்பாய்) ஆகியோரின் மாமியாரும், திருமதி ஞானமணி பாக்கியதுரை, இராஜேந்திரன், தேவராஜா, திருமதி தவமணி பரராஜசிங்கம், இரவீந்திரன், பாலேந்திரன், செல்வச்சந்திரன், பாஸ்கரன், விவேகச்சந்திரன், இராகினி, சிறீதரன், மதிவண்ணன், சுபாஸ்கரன், முரளீதரன், சுபாசினி, மகிழ்ராஜன், இரவீந்திரன், றஞ்சினி, திருமதி ராஜினி சிவகுமார், மனோகரன், வதனி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சங்குவேலி தெற்கு, மானிப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (5-1-95) காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய்ப் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
த. இராஜதுரை
(மகன்)

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.
(34522)

## திருமதி குலசிந்தாமணி குணசிங்கம்

[ஓய்வுபெற்ற யாழ் இ.ஆ. பாடசாலை ஆசிரியை]

கந்தர்மடம், மணல்தறை லேனைச் சேர்ந்த காலஞ்சென்ற குழந்தைவேலு தங்கம்மா தம்பதிகளின் மகள் குலசிந்தாமணி காலமாகிவிட்டார்.

அன்னார் குணசிங்கம் (முன்னாள் யா.ஐ.வி.சங்கம் மோட்டார் பகுதி, சேவிஸ்ரேசன் முகாமையாளரும், தற்போது இயந்திரம்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கனகம்மாவின் மருமகளும், வரதராஜன் (ராஜு ஸ்ரோஸ்), பரிமளா தேவி (ஜேர்மனி), சயந்தன் (ஜேர்மனி), யனார்த்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தம்பிஐயா (ஜேர்மனி)' வரதலட்சுமி ஆகியோரின் மாமியாரும், சோதிராஜாவின் (வைர மாளிகை கொழும்பு) அன்புச் சகோதரியும், மனோன்மணி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி, திருஞானச்செல்வம், நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 5. 1. 95 வியாழக்கிழமை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. குணசிங்கம்
(கணவர்)

44/2, மணல்தறை லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(34526)

## P. N. R. அமிர்தவாசகம்

P. N. R. அமிர்தவாசகம் 4-1-95 நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் முன்னாள் புனித சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியை மேரி நேசம்மாவின் அன்புக் கணவரும், ஜோர்ஜ் றவீந்திரனின் (கனடா) பாசமிகு தந்தையும், சித்திராவின் அன்பு மாமனாரும், சத்தியா, சுதன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திரு திருமதி J. P. நல்லையா அவர்களின் சிரேஷ்ட புத்திரனும், அருளம்மா செல்லத்தம்பு, P. N. சாள்ஸ் (யாழ்.மா. சபை) P. N. அற்புதநாதர் (கனடா). S. E. ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவமணி' P. M. பேரின்பநாதன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (5-1-95) பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி அமிர்தவாசகம்
(மனைவி)

13/3, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(34529)

## இராசையா பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் – உடுவில் உதவி அரச அதிபர் செயலகம், கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபை தலைவர்)

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த இராசையா பொன்னம்பலம் நேற்று சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சரவணமுத்து இராசையா தம்பதிகளின் மூத்த புதல்வரும், தவமணியின் அன்புக் கணவரும், இராசசேகரம் (சிவமயூரன் மில்) அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கா. கந்தசாமி மற்றும் கா. பொன்னம்பலம், கா. மகாதேவா, திருமதி இ. இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், சுகந்தினி, சுதர்சினி, சிவமயூரன் ஆகியோரின் பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (5–1–95) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
இ. இராசசேகரம்
(சகோதரர்)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(34530)

---

யாழ். பெரியாஸ்பத்திரியில்

# மின் சீர்குலைவு காரணமாக நோயாளர் பெரிதும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 5

யாழ். ஆஸ்பத்திரியில் தற்போது நிலவும் மின்சார சீர்குலைவால் சத்திரசிகிச்சை பிரிவு உட்பட சில முக்கிய பிரிவுகளின் செயற்பாடுகளில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை அனுபவித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியின் பாவனையில் இருந்து வந்த ஆறு மின்சார இயந்திரங்களில் மூன்று இயந்திரங்கள் பழுதடைந்து கடந்த ஒரு வார காலமாக செயலிழந்துள்ளன.

பிற்பகல் வேளையிலும் இரவு வேளையிலும் சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியாது — மிக அவசரமான சத்திர சிகிச்சைகளைத் தவிர ஏனைய சத்திர சிகிச்சைகள் பிற்போடப்பட்டுவருகின்றன.

10 கே. டபிள்யூ ஜெனரேற்றர் இயங்குவதனால் சில பெரிய இயந்திர உபகரணங்களை இயக்க முடியவில்லை. இதனால் முக்கிய சில பிரிவுகளின் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன.

சத்திரசிகிச்சைப் பிரிவின் கிருமி அகற்றும் மின் உபகரணம், மற்றும் சத்திரசிகிச்சையின் போது பாவனையில் இருக்கும் சில இயந்திரக்கருவிகள் என்பன இயங்கமுடியாமல் உள்ளன.

அத்தியாவசிய சேவையை செய்யும் பொருட்டு சத்திர சிகிச்சைப் பிரிவில் முக்கிய உபகரணப் பொருட்கள் மண்ணெண்ணெய் அடுப்பில் அவித்தே கிருமி நீக்கிப்பாவிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

### அறிஞர்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விரட்டியடித்தனர் என்றும்— சொல்லப்படுகிறது.

பேராசிரியர் சிவத்தம்பி உலகத் தமிழ்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மனைவி ரூபவதியுடன் வந்திருந்தார், அவரும் பல்கலைக் கழக பேராசிரியர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிவத்தம்பி ஊன்றுகோல் உதவியுடன் நடந்துவந்தார் என்றும் —

வயதான இந்தத் தம்பதி உலகத் தமிழர் மாநாட்டை விட்டு வெளியேற்றப்பட்டது குறித்து பலரும் வியப்பும், கண்டனமும் வெளியிட்டுள்ளனர் என்றும்—

செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள தமிழகம் சென்று அங்கு வைத்துப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்களில் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி. சி. வி. செல்லையா, அக்கல்லூரி ஆசிரியை திருமதி ஜெயசுனித்தா ஆகியோரும் அடங்கியுள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (ஓ-ஜ-3)

### அழைப்பின்றிச்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாவின் வேண்டுகோளின் படியே இவர்கள் அங்கு சென்றதாகவும் தெரியவந்தது.

அதேவேளை—

தமிழகத்தில் தங்கியிருந்த அமைச்சர் தொண்டமான், தமிழக முதல்வருடன் தொடர்பு கொண்டு, ஈழத் தமிழ் அறிஞர்கள் ஐவருக்கு மாநாட்டில் பங்குபற்ற அனுமதி பெற்றுக் கொடுத்து, உரிய அழைப்பை அனுப்பி வைத்ததாகவும் –

ஆனால் அந்த ஐவரில் மூவர் அத்தகைய அழைப்பை ஏற்க மறுத்து விட்டதாகவும் அவர்களில் ஒருவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்-குழுவின் தலைவரும், உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைத் தலைவருமான பேராசிரியர் சி. பத்மநாதன், யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் காரை செ. சுந்தரம்பிள்ளை, வீரகேசரி பத்திரிகை ஆசிரியர் சிவநேசச்செல்வன் ஆகியோரே அழைப்பை ஏற்க மறுத்தவர்கள் எனத் தெரியவந்தது. (உ-3)

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 5

குழந்தை விருத்தி தொடர்பான மனைப் பொருளியல் கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8. 30 மணிமுதல் யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெறவுள்ளது.

வைத்தியக் கலாநிதி திருமதி. வி. கருணாகரன் அந்தக் கருத்தரங்கை நடத்தவுள்ளார். மனைப் பொருளியல் ஆசிரியர்களை அதில் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்த்து வைப்பதில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்றும் —

விடுதலைப் புலிகள் தலைவர்கள் கூறியுள்ளனர்,

ஜனாதிபதி மீது வைத்துள்ள நம்பிக்கை, விசுவாசம் நல்லெண்ணம் ஆகியவற்றை தெரிவிப்பதற்காகவே தங்களது காவலில் உள்ள பொலீஸாரையும் தாங்கள் விடுவித்திருப்பதாக விடுதலைப் புலிகள் தலைவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

— இவ்வாறு அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது. (உ-க-3-6)

### வடக்கிற்கான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருதுகிறது.

பூநகரி இராணுவ முகாம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று விடுதலைப்புலிகள் வற்புறுத்தினர். ஆனால் வடக்கில் தற்போது நிலவும் இராணுவ நிலைமையில் அரசு இதற்கு இணங்க முடியவில்லை என்று அரசுத் தரப்பு அறிக்கை கூறுகின்றது.

இதனால் பாதை திறப்பதில் இறுதி உடன்பாடு ஏற்படவில்லை.

ஆனால்—

பூநகரி பாதை மற்றும் ஆனையிறவு வழி ஆகிய இரு பாதைகளையும் திறப்பது குறித்து அரச படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் விரைவில் உடன்பாடு ஏற்படும் என பரவலாக எதிர்பார்க்கப் படுகிறது. — என்று தெரிவிக்கப்பட்டது. (உ-க-3)

### மோதல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்கள் பற்றிய மேல் விவரங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாளை வெளியிடுவார் என்று சொன்னார்.

மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை நடைமுறைப் படுத்த விடுதலைப் புலிகள் இணங்கியிருப்பதாகவும் —

மூன்றாம் கட்டப் பேச்சு எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறும் என்றும் அவர் மேலும் சொன்னார். (உ-க-3-6)

### ஜனவரி 20 அரச விடுமுறை

கொழும்பு ஜன. 5

ஜனவரி 20ஆம்திகதியை அரசாங்க விடுமுறைத் தினமாகவும் விசேடவங்கி விடுமுறைத் தினமாகவும் அரசாங்கம் பிரகடனம் செய்திருக்கிறது.

பரிசுத்த பாப்பரசர் இலங்கைக்கு விஜயம் செய்வதை முன்னிட்டு இந்த விடுமுறைத்தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 21ஆம் திகதியை விசேட வர்த்தக விடுமுறைத் தினமாகப் பிரகடனம் செய்யுமாறு தனியார் துறையினருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### தாவரவியல் பரீட்சை

அமரர் வ. சின்னத்தம்பி ஞாபகார்த்தப் பரிசிலுக்கான தாவரவியல் போட்டிப் பரீட்சைத்தொடரில் ஐந்தாவது பரீட்சைநாளைவெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

இந்தப் பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்டபடி யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பரீட்சை நிலையங்களிலும் நடைபெறும். (ஓ-15)

### சண்முகதாஸ் அறிக்கை

கொழும்பு, ஜன. 5

எங்களின் ஆய்வுத் தரவுகளை உலகம் அறிவதை தமிழாராய்ச்சி மன்றம் விரும்பவில்லை. இதன் காரணமாகவே அங்கிருந்து நாம் திருப்பி அனுப்பப்பட்டோம்.

— இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் அ. சண்முகதாஸும் அவரது துணைவியாரும் கூட்டாக வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (ஐ)

### தமிழ் மாநாடு இன்று நிறைவு

தஞ்சாவூரில் நடைபெற்று வரும் எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடு இன்று நிறைவு பெறுகிறது.

தமிழாராய்ச்சி மாநாட்டை நினைவு கூருமுகமாக முத்திரை ஒன்றை இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் இன்று தஞ்சாவூர் மாநாட்டில் வெளியிட்டு வைப்பார்.

தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா முத்திரையைப் பெறுவார்.

### யாழ். வாசிகள்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்த போது 110 சவர்காரப் பெட்டிகள் காணாமல் போய்விட்டிருந்தன.

இதனை அடுத்து தியாகராஜா வாழைத்தோட்டப் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்தார் பொலீஸாரின் தீவிர தேடுதலின் பின் பொருள்கள் கைப்பற்றப்பட்டன தொடர்ந்து பிரஸ்தாப இருவரும் கைது செய்யப்பட்டனர். (ஓ-9)

### உடன்பாட்டுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதும் மக்கள் சமாதானத் தீர்வுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்து வாக்களித்தார்கள்.

இராணுவத்துக்கு புலிகளைப் பற்றிச் சந்தேகங்கள் இருக்கலாம். ஆனால் அரசியல் தீர்மானம் ஒன்று ஏற்படும் போது இராணுவம் அதனை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்; வேறு வழியில்லை.

புலிகளுடன் அரசாங்கம் பேசித்தான் தீரவேண்டும்; மற்றைய குழுக்களும் எவ்வளவுதான் எச்சரிக்கையாக இருந்தாலும் இதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.— இவ்வாறு அவர் குறிப்பிட்டார். (உ-3)

## ஆத்மார்த்த அஞ்சலி

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்னைநாள் தர்மகர்த்தா சபைத் தலைவரும், தற்போதைய நிர்வாகசபைத் தலைவருமான

### இராசையா பொன்னம்பலம்

அவர்கள் நேற்று மாலை சிவபதமடைந்தார். அன்னாரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினரின் துன்பத்திலும், துயரத்திலும் பங்குகொண்டு அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல மஞ்சவனப்பதி முருகனின் பாதார விந்தங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

மஞ்சவனப்பதி முருகன் ஆலய
நிர்வாகசபை

(34531)

---

சுகாதார சேவை ஊழியர்களின்

# சம்பள முரண்பாடுகளை பரிசீலிக்க ஆணைக் குழு

கொழும்பு, ஜன. 5

சுகாதார சேவையைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களினதும் சம்பள முரண்பாடு பற்றிப் பரிசீலிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது என சுகாதார அமைச்சர் எச். எம். பௌஸி தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவையில் 292 வகையான பணியாளர்கள் உள்ளனர் எனவும்—

ஆணைக்குழுவின் பரிந்துரையின் பின்னர் அனைத்து ஊழியர்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும் எனவும் —

இந்த ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்க பொதுமக்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (க-6)

## மாணவர் காப்புறுதி திட்டம்

கொழும்பு, ஜன. 5

பாடசாலை மாணவர்களுக்கான காப்புறுதித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாடளாவியரீதியில் அமுல் செய்யப்படவிருக்கும் இத்திட்டத்தில் ஆரம்ப நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காப்புறுதித் திட்டத்தில் சேரும் மாணவர்கள் வருடம் ஒன்றுக்குத் தலா 12 ரூபாவை செலுத்த வேண்டும்.

காப்புறுதி செய்யப்பட்டவர் திடீர் விபத்தினாலோ, ஆபத்தினாலோ, நோயினாலோ பாதிக்கப்பட்டால் அவருக்கு 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகை இழப்பீடாக வழங்கப்படும். (ஓ-க)

## கப்பல் பொருள் இறக்கும் பணி நேற்று தடைப்பட்டது

வடமராட்சி, ஜன 5

பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று பொருள்கள் இறக்கும் பணி நடைபெறவில்லை.

பொருள்களை இறக்கும் இழுவைப் படகுகளை இழுத்துவரும் படகுகளுக்கு எரிபொருள் வழங்குவதில் உள்ள இழுபறி நிலையினால் குறித்த படகுகள் சேவையிலீடுபடாததினாலேயே பொருள்கள் இறக்கும் பணி தடைப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பொருள்கள் இறக்கும் பணி நடைபெறாத போதிலும், மாஹோ கப்பல் காங்கேசன் துறையிலிருந்து நேற்றுக் காலை பருத்தித்துறை வந்து வழமைபோல மாலையில் திரும்பிச் சென்றது. (ஓ-17-3)

1980 வேலை நிறுத்தக்காரருக்கு

## மீள வேலை வழங்கும் பணி அடுத்த வாரத்தில் ஆரம்பம்

1990 ஜூலை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு மீள வேலை வழங்கும் பணி அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படும் என்று அரச நிர்வாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முதற் கட்டத்தில் 55 வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கு வேலை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும்—

இரண்டாம் கட்டத்தில் 55க்கும் 60 க்கும் இடையிலான வயதுள்ளவர்களுக்கு வேலை வழங்கத் தீர்மனிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-க-6)

அங்கத்தவரை சேர்க்காத

## செஞ்சிலுவை கிளைகளுக்கு எதிராக நடவடிக்கை

செஞ்சிலுவைச் சங்கக் கிளைப் பிரிவுகளில் அப்பகுதியைச் சேர்ந்த எவருக்கும் அங்கத்தவராகச் சேரும் உரிமை உண்டு. சேர விரும்புவோரைச் சேர்க்காது பின்னடிக்கும் செஞ்சிலுவைக் கிளைப் பிரிவுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைமையகக் கிளை இவ்வாறு தெரிவித்துள்ளது.

மேற்படி கிளையின் கீழ் இயங்கும் சில பிரிவுகள் அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கு பின்னடித்து வருவதாகப் புகார் செய்யப்பட்டதை அடுத்தே அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அறியவருகிறது.

### எமக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது நடவடிக்கை எடுக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர் — என்றார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்களுக்கு சிறந்த சேவை அளிப்பதாக டபிள்யு ஜி. சந்திரசிறி எடுத்துக் கூறினார்.

பி. எஸ். பி. பண்டார தமிழில் பேட்டியளித்தார்.

சுமார் நாலரை ஆண்டுகாலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்தப் பொலிசாரை சந்திப்பதற்கு அவர்களின் பெறரோர், உறவினர் நன்பர்கள் பெரும் எண்ணிக்கையில் வந்திருந்தனர். (அ-க-ஐ'6)

### மாணவருக்கு ரூ. 10 ஆயிரம் பரிசு

யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் வர்த்தகத் துறையில் 4 ஏ பெற்ற மாணவர் அரியகுட்டி சுபேசனுக்கு நேற்று ரூபா 10,000/- யாழ்ப்பாணக் கல்லூரி வழங்கியது. தென்இந்திய திருச்சபை ஆயர் வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் இதனை விசேட மாணவர் கூட்டமொன்றிலே வழங்கினார். கல்லூரி அதிபர் திரு. எஸ். இராசநாயகம் ஆயரை வரவேற்றுப் பேசினார்.

கல்வி மேம்பாட்டு கழகத்தினர் நடத்திய க. பொ. த. பரீட்சையில் முதலாவது இடத்தைப் பெற்ற செல்வி சுதர்சனா மகேந்திரனுக்கும் ஆயர் விருது வழங்கினார்.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை மகாலிங்கம்

கந்தர்மடம், கந்தபுராண வீதியைச் சேர்ந்த செல்லத்துரை மகாலிங்கம், 3-1-95 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4-1-95 அன்று அரசடி சந்தி, 343, பருத்தித்துறை வீதி, நல்லூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்றன என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ம. ஞானேஸ்வரி
(மனைவி)
க. இரவீந்திரகுமாரன்
(மைத்துனர்)
சு. பாலசண்முகநாதன்
(சகலன்)

(34527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05—01—1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.